பதிவுசெய்யப்பெற்றது.

ஸ்தாபிதம்:(1889)

ௐ

# இந்து சாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

['ரெலிபோன்' இல. 56.]

பத்திரக் கிரயம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: " ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: " ரூ | 9.00 |
| தனிப்பிரதி: | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

உ

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச், சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருளகை னீங்கப், பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாகமத் தினிது தாங்கப், பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்தவறிவிச்சைதொழிலென்றேனு, மதம்பூத்தவிநாயகன் ருன்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ 10-00 |
| " | அரைக்கலம் | ரூ. 5-00 |
| " | கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு டெ விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிப் பதிக்கப்படா.

புத்தகம்—சுஅ } யாழ்ப்பாணம்; - ஆங்கிரச வூ ஆடிமீ கங, (1932 ஜூலாய் 28) வியாழக்கிழமை { இலக்கம்—அ.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும்,
ஆன்ற பெருமைதரும்"

## ஓர் புதிய மதம்.

[ஸ்ரீமத் சுவாமி தேவாத்மானந்தா அவர்கள் "பிரபுத்தபாரத"ப் பத்திரிகையில் எழுதியதன் மொழிபெயர்ப்பு.]

(21-7-32-ன் தொடர்ச்சி)

இவ்விஷயத்தில் பாரதநாட்டில் உண்டான மதங்களைப்பற்றி ஈண்டுக் குறிப்பிடுதல் ஏற்புடைத்தாகும். இம்மதக் கொள்கைகளைப் பன்னூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் போதகர்கள் உலகத்து எத்திசையினும் போதித்து வந்தனர். ஆனால் "பரலோக சாம்பிராச்சியத்தை"ப் பூவுலகில் நிறுவுவதற்காக இவர்கள் வாட்படையேந்தி வேற்றுமதஸ்தர்கள் மத்தியிற் பிரவேசிக்கவில்லை. அநாதர்களை இரத்தப்பலியூட்டி அவர்கள் மத்தியில் அன்பே யுருவாயமைந்த பகவானைப்பற்றிய போதனைகளை இந்த மத குரவர்கள் போதிக்கவில்லை. கோடிக்கணக்கான மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகத் தவிக்க அவர்கள் விடவில்லை. இக்காலத்திற்போல அத்துணைவசதியான போக்குவரத்துப் பாதைகள் அக்காலம் இருந்திருக்கவில்லை அப்படி இல்லாதிருந்தும் இந்த மதகுரவர்கள் உலகத்திலுள்ள மூலை முடுக்கு எங்கணும் சென்று தம கொள்கைகளைப் பரப்பிவந்தனர்.

கடவுள் கோபமுள்ளவர்; தம்மை விசுவாசியாதவரை வருத்துவார்; விசுவாசிப்பவரையே அவர் காப்பாற்றுவார் என்ற கொள்கைகளை அக்காலத்திருந்த பாரதநாட்டு மதபோதகர்கள் போதிக்கவில்லை. கடவுள் அன்புமயமானவர்; அவர் எல்லோர் மீதும் சமத்துவமான அன்பே கொண்டிருக்கிறார். சர்வதயாபராகிய அவரின் சன்னிதியில் நாங்கள் எல்லோரும் சமத்துவமான சேயரே என்ற போதனைகளையே முன்னாள் விளங்கிய பாரத புத்திரர் ஊட்டிவந்தனர்.

சமயங்கள் இறைவனை அறிந்து அவனை அடைதற்குச் சாதனமாகவுள்ளன. எனினும் அவற்றைப் பரப்பும் தொழிலில் ஈடுபட்டவர்களும் ஈடுபட்டிருக்கின்றவர்களும், பிழையான கொள்கைகளைப் பரப்பிவருகின்றார்கள். அவர்கள் தங்கள் கொள்கைகளைக் காலம் இடம் அறிந்து பரப்பாதபடியால், அவை உண்மைக்கு முரண்பட்டனவாய் இருக்கின்றன. இது இப்படி, அது அப்படி, இன்னார் இன்னகாலத்திற் தேவனைக் கண்டார்; தேவன் இன்னவாறு கூறினார் என்னும் இன்னோரன்ன பழங்கதைகளைக் கூறி, மதக்கொள்கைகளை மனப்பூர்வமாய் ஜனங்களை நம்பும்படி செய்தல் முடியாதகாரியமாகும். இப்பழங்கதைகள் ஒருகாலத்தில் பயனைத்தந்தனதான் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இப்போது அவை பயன்விளைக்காது. நன்கு ஆராய்ந்த பின்னரே ஓர் விஷயத்தைப் பற்றிய முடிவுக்கு வருங்காலம் இது. இத்தகைய காலத்தில் மனிதர் கிளிப்பிள்ளைகள் போல், இந்த மதபோதகர்கள் கூறும் எவற்றையும் கேட்டு அங்கீகரிப்பார்களா? அப்படிக்கேட்டு அங்கீகரித்த காலம் மலையேறிவிட்டது.

இவற்றையெல்லாம் தற்போது உலகில் விளங்கும் மதபோதகர்கள் எல்லோரும் நன்கு அறிவார்கள். ஆனால் பழைய கொள்கைகளைவிடுத்துப் புதிய கொள்கைகளைக் கைக்கொள்ள அவர்களின் மனம் பிரியப்படுகின்றதில்லை. பழையன கழிந்து புதியன புகுதல் சமையோசிதமானது என்பதை இந்த மதபோதகர்கள் உணர்கின்றார்கள் இல்லை இதில் இருந்து சமயங்களில்உள்ள கிரியைகள் யாவும் நீக்கப்படல்வேண்டும் என யாம் கூறுகின்றோம் அல்ல. அக்கிரியைகள் இறைவனை அறிந்து வழிபாடு செய்வதற்குச் சிற்சில சமையங்களிற் தேவைதான். ஆனால், மதப்பித்துக்கொண்டு ஒரு சிலரைக் குறித்த ஓர் சமயத்தில் வைத்திருப்பதற்காக வெளிக்கிரியைகளை வற்புறுத்துவது மதியீனம் "இன்னவின்ன கிரியைகளைச் செய்தாற்றான் இறைவன் உன்னை விசுவாசிப்பார். இக்கிரியைகளை நீ கட்டாயம் செய்தேதீரவேண்டும். அல்லாவிட்டால் நீ நரகத்திடை அழுந்துவாய்" என்று சில மதபோதகர் கண்டிப்பான விதிகளை விதிக்கிறார்கள். இவற்றால், இப்படிக் கட்டுப்படுத்தப்படுபவனின் ஆன்மசக்தி குன்றிவிடுகிறது. கேவலம், கிரியைகளிலேயே, தன்னுடைய ஈடேற்றம் தங்கியிருக்கின்றது என்று அவன் நம்பிவந்தான். ஆனால் அவன் இப்போது கண்விழித்துவிட்டான். இக்கிரியைகளை யான் இயற்றினால் எவ்வாறு மோட்சமடையலாம்? கிரியைகளை ஆற்றாத பட்சத்தில் யான் ஏன் நரகில் வீழவேண்டும்? என்னும் இன்னோரன்ன கேள்விகள் அவன் மனதில் உதிக்கின்றன உதித்ததும், அவன் அவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்றான். அப்படி அவன் ஆராய்ச்சி செய்யும்போது இந்த மதபோதர்கள் அவனுக்கு மௌடீகம் கற்பிக்கின்றனர். அவன் இந்த மதக்கொள்கைகளில் அதிருப்தி யடைகின்றான். ஆனால் அவன் நிரீச்சுரவாதியா? இல்லை, இல்லை அவன் இறைவனில் நம்பிக்கையுடையவனாய் இருக்கிறான். ஆனால் இறைவனை அறியும்வழி இது என்பதை அறிய இயலாது தத்தழிக்கிறான் அதிகம் போகவேண்டாம் ருஷியா தேசத்தை எடுத்துக் கொள்வோம் அங்கேயுள்ள மதாலயங்கள் எல்லாம் இடிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ பாதிரிமாருக்கு மாறாக் கிளர்ச்சி செய்யப்படுகின்றது. ருஷியா தேசத்தார் மதத்தை அழிக்க முற்பட்டுவிட்டனர் என்று உலகோர் யாவரும் கூறுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. ருஷியமக்கள் அன்றுதொட்டுப் பல வருஷங்களாக மதபோதகர்களின் கொடுமைகளுக்குள்ளாகி வந்தனர். "சமயத்தை ருஷிய மக்கள் தாக்குகின்றார்களல்லர். ஆனால் மதகுரவர்களின் போதனைகளையே தாக்குகின்றனர்" என அந்நாட்டிற் சுற்றுப் பிரயாணம் செய்த உலகப் பெரியாரான மிஸ்டர் பேர்னாட் ஷா அவர்கள் கூறுகின்றார். உண்மை என்னவென்றால், ருஷிய மக்களில் அநேகர் ஆன்ம ஈடேற்றத்திற்கானவற்றைத்தேடி அவாப்படுகின்றனர். ஆனால் அவர்கள் சில விஷயங்களிற் கொண்டும் ஆசங்கைகள் திருப்திகரமாகத் தெளிவிக்கப்படுகின்றதில்லை. இது சரியோ பிழையோ என்பதை அவர்கள் அறியவிரும்பினால், அவர்களை அக்காலத்திருந்த மதபோதகர்கள் அடக்கியாண்டுவந்தனர். எனவே மதக்கொள்கைகளில் ருஷியமக்கள் திருப்தியற்றனர்.

(வரும்)

## கடன் விருந்திற்குத் தப்பும் ஜனப்பிரதி நிதிகள்.

### அரசாங்கசபையில் நடந்தசம்பவம்.

"பிஸ்கால்" சேவகனுக்கு மையூற்றிய மர்மம்.

சேவகனைக்கண்டு ஓடிய அங்கத்தவர்.

—:*:—

சென்ற 6-ம் தேதி B. K. அமாரிஸ் என்ற "பிஸ்க்கால்" சேவகன் அரசாங்கசபை யங்கத்தவர் ஒருவருக்குக் கடன் கட்டளை அளித்தற்காகச் செல்லும்போது. அரசாங்கசபைச் சேவகனாகிய மார்ட்டின் என்பவன், அமாரிஸ் என்பவனைத் தடுக்கும் நோக்கமாக அவனுடைய சட்டையில் சிகப்புநிற மசியை ஊற்றினான் என்ற வழக்கு சென்ற 25-ம் தேதி விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின் விபரம்:

வழக்காளியின் முறைப்பாடு.

"எனக்கு எதிரியை இதற்குமுன்னரும் தெரியும். எதிரிக்கும் என்னை நன்குதெரியும். நான் பிஸ்கால் கடன் கட்டளை கொடுக்கும் சேவகன் என்பது எதிரிக்குத் தெரியும். சென்ற 4 வருஷகாலமாக எதிரியை நானறிவேன்.

"நானென துஉத்தியோகத்திற்குரிய முத்திரையையும், "பெல்ற்"றையும் சட்டைப்பையினுக்குட் கொண்டுபோவது வழக்கம். தேவையான நேரத்தான் நான் அவற்றை வெளியில்எடுத்து அணிவேன். இதுசம்பவம் நடந்த தினத்தன்று சம்பவம் நடக்குமுன் நான் முத்திரையையும "பெல்ற்"றையும் அணிந்திருக்கவில்லை. ஆனால் மேற்படி சம்பவத்திற்குப்பின்னர், அவற்றை அணிந்தேன். மேற்படி தினத்தன்று அரசாங்கசபை யங்கத்தவர்களுட் பலருக்குக் கடன்கட்டளை கொடுப்பதற்காக அரசாங்கசபை மண்டபத்திற்குட் சென்றேன். இந்தச்சம்பவத்தின் பயனாக, மேற்படி அங்கத்தவர்களுக்கு யான் கட்டளை கொடுக்க முடியவில்லை. நான் குறித்த இடத்தில் நின்றதற்குக் காரணம் அரசாங்கசபை யங்கத்தவர்கள் அவ்விடத்திற்றான் தமது இரதங்களினின்றும் இறங்கி மண்டபத்தினுட் செல்வார்கள். அதில் நின்றால், அவர்களுக்குக் கட்டளை அளிப்பது இலகு இதற்குமுன் குற்றவாளியானவன் கட்டடத்திற்குவெளியே நிற்கும்படி எனக்குப்பணித்தான். என்னை உள்ளே விடுவதையிட்டு, அங்கத்தவர்கள் எல்லோரும் தன்னை ஏசுகிறார்கள் என்று அவன் எனக்குக் கூறினான்.

"இதைப்பற்றி அரசாங்கசபைத் தலைவர் ஏதும் விசாரணை புரிந்தாரோ இல்லையோ என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. அமாரிஸ் என்பவன் உண்மையிற் குற்றவாளியேயானால் அவனுக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று சபைத்தலைவர் எனக்குக்கூறினார். நான் இதைப்பற்றி முதன்முதல் முறைப்பாடு செய்தது பொலிஸ் பரிசோதகருக்காகும். அப்போது எனக்குக் குற்றவாளியின் பெயர் தெரியாது. நாக்கியுடைதரித்த ஒருவன் என்சட்டைமீது நிவந்த மசியை ஊற்றினான் என்றே யான் பொலிஸ் பரிசோதகருக்கு முறைப்பாடுசெய்தேன். பைசிக்கின் பியோன்தான் எனக்கு மையூற்றினான் என்று யான் கூறவில்லை; பரிசோதகருக்கு முறைப்பட்டபின், பிரதம லிகிதருக்கு முறைப்பட்டேன். அதன்பின்னர் அரசாங்க சபைத் தலைவருக்கு முறையிட்டேன். அப்போது அவர் தமது அறையில் இருந்தார். என் முறையீட்டைக் கேட்ட தலைவர் மணியையடித்து ஆராய்ச்சியைக் கூப்பிட்டு மசியூற்றினது யார் என்பதை அறிந்துவருமபடி கூறினார். அரசாங்கசபைக் கூட்டம் முடிந்தபின் விசாரணை புரிவதாகத் தலைவர் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை.

எனக்கு மை யூற்றப்பட்ட இடத்தில் நின்றே அரசாங்கசபை அங்கத்தவர் ஒருவருக்கு நான் கடன்கட்டளை அளித்தேன். என சட்டையில் மை விழுந்ததும், அது எங்கேயிருந்து விழுந்தது என்பதை அறிவதற்காக மேல்நோக்கினேன். அப்போது மேல்மாடியில் நின்ற எதிரி பின்புறமாக ஓடி மறைவதைக் கண்டேன்

நீதிபதி: அரசாங்கசபை மண்டபத்துட் சென்று அங்கத்தவர்களிடம் நீ என் கடன் கட்டளைகளை அளிப்பதில்லை?

சேவகன்: நான் அநேகமாக உட்செல்லுவதில்லை; மேலும் வாயில்காக்கும் சேவகர் என்னை உட்செல்ல விடுவதில்லை.

நீதி: வாயில்காப்போர் உன்னை உட்செல்ல விடாவிடின், நீ உடனே அதைப்பற்றிப் பிஸ்கால் உத்தியோகத்தருக்கு அறிவித்துவிட்டு, உன் கடமையைச் செய்யும்போது தடை புரிந்தமைக்காக அவர்கள்மீது பிராது தொடுக்கவேண்டும்.

சேவ: நான் சம்பவம் நடந்தபோது, என் உத்தியோகத்திற்குரிய அறிகுறிகளை அணிந்திருக்கவில்லை. ஆனால் நான் அணிந்திருந்த சட்டையின் பெரிய பையை நோக்கும் எவரும் நான் ஒரு பிஸ்கால் சேவகன் என்பதை எளிதில் அறிந்துகொள்வார்கள்.

நீதி: நீ ஏன் உன்னுடைய "பெல்ற்"றை அணிந்துகொண்டு அங்குநிற்பதில்லை?

சேவ: நான் அப்படிநின்றால், ஐயா, நான் கட்டளை கொடுக்கவேண்டிய அங்கத்தவர்கள் அங்கு இறங்காது, வேறொரு வழியால் உள்ளே செல்வார்கள். (நகைப்பு)

நீதி: உனது நீண்ட சட்டைப் பையைக் கண்டாலும் அவர்கள் அப்படிச் செய்வார்கள்தானே?

சேவ: ஐயா, இந்த நீண்ட சட்டைச் சாக்குகளைத் தூரத்தில் எவரும் குறிப்பாகப் பார்க்கமுடியாது. ஆனால் "பெல்ற்"றை நான் அணிந்திருந்தால் அப்படிக் கண்டுவிடுவார்கள். குற்றவாளியாகிய மார்ட்டின் யான் கட்டளை கொடுக்கவேண்டிய யாரோ சிலரின் ஏவலின் பேரிலேயேதான் மையூற்றினான் என்று நம்புகிறேன்.

நீதி: அரசாங்கசபை மண்டபத்திற்குட் சென்றே இத்தகைய கட்டளைகளைக் கொடுக்கலாமே; ஏன் அப்படிக் கொடுக்கவில்லை?

மிஸ்டர் மெரில்பெரிரா: (வழக்காளியின் நியாயவாதி) ஒருமுறை ஒரு பிஸ்கால் உத்தியோகத்தர் அரசாங்கசபைக்குட் போக, ஒரு அரசாங்கசபையங்கத்தவர் அவ்வுத்தியோகத்தரைக் கண்டு ஓட்டம்பிடித்தார். அவர் ஓட உத்தியோகத்தர் கலைக்க, நிலம் வழுக்க அவ்வுத்தியோகத்தர் கீழே விழுந்தார். அதனாற் பெரும் அல்லோல கல்லோலம் நேர்ந்தது.

வழக்காளியின் சாட்சியத்தின் பின்னர் பொலிஸ் உதவிப் பரிசோதகராகிய

தொடர்ச்சி 5 ம் பக்கத்தில்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஆங்கிரசவூ
ஆடி மீ கஙு வியாழக்கிழமை.

## இது சரியல்லவே.

ஏறக்குறைய 50 வருடகாலமாக யாழ்ப்பாணத்திற்கும் மலையாளத்திற்குமிடையே புகையிலை வியாபாரம் நடைபெற்று வந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள தோட்டக்காரருக்கு மலையாளப் புகையிலை வியாபாரமே அன்று தொட்டு இன்றுவரையில் பிரதான வருவாய்க்கு ஏதுவாகும். இந்தியாவின் ஏனைய இடங்களிலிருந்து மலையாளத்திற்குப் புகையிலை அனுப்பப்பட்டாலும், அவற்றைக்காட்டிலும் யாழ்ப்பாணம் புகையிலைக்கே மலையாளத்தில் அதிக மானமுண்டாம். சுருங்கச் சொல்லுகில் யாழ்ப்பாணத்தாரைப்போல் ஏனைய நாட்டினர் புகையிலையை நன்கு பதப்படுத்தமாட்டார்களென்பதே உலகப் பிரசித்தம்.

யாழ்ப்பாண—மலையாளப்புகையிலை வியாபாரத்திற்கு முன்னர்ச் சிற்சில சமையங்களில் இடையூறு நேர்ந்ததுமுண்டு. அப்படி நேர்ந்த காலங்களில் இந்துசாதன ஆங்கிலப் பத்திரிகையின் கௌரவ ஆசிரியராய் விளங்கியவரும், இலங்கைச் சட்டசபைப் பிரதிநிதியாகவிருந்தும் இந்நாட்டின் சனத்தலைவராயிருந்தும் இந்நாட்டின் எல்லாவகையான மேடேற்றத்தின் பொருட்டும் திரிகரணமுமொத்து உழைத்தவரும் உண்மைத் தேசாபிமானியுமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமாந்: அ. சபாபதியவர்கள், யாழ்ப்பாணத்து மக்கள் கஷ்டமடையாத பிரகாரம் அந்த இடையூறுகளை அவ்வக்காலங்களில் நீக்கி வந்தார். இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் இந்த விஷயமாக அக்காலத்தில் அதிகம் உழைத்துவந்தமையைப் பலர் அறிவர். ஆனால் இப்படியான புகையிலை வியாபாரத்திற்கு இப்பொழுது இருவகையான அநர்த்தம் நேரலாயின. அவற்றுள் ஒன்று என்னவென்றால், மலையாளத்திலிருந்து இலங்கைக்கு வந்து கொழும்பு முதலிய இடங்களிற் பிழைத்த மலையாளிகளை, பணமுட்டு தொழிலின்மையென்ற காரணங்கள்பற்றி ஆங்காங்குள்ள சிங்களவர் புறக்கணித்தொதுக்க, அதனால் தம்மூருக்கு மீண்ட மலையாளிகள் இலங்கைவாசிகளோடு எவ்வகையான வியாபாரமும் தம்நாட்டவர் செய்யக்கூடாதென்று கண்டிக்க, யாழ்ப்பாணத்தவரும் இலங்கைவாசிகள்தாமே யென்று மலையாளத்தவர் மதித்துப் பகைமை பாராட்டி யாழ்ப்பாணத்துப் புகையிலை வியாபாரத்தைப் பகிஷ்காரஞ் செய்ய முயன்றனர் இந்த விஷயமாகச் சில மாசங்கட்கு முன்னர் இப்பத்திரிகையில் ஒரு வியாசமெழுதியிருந்தேம். ஆனால், யாழ்ப்பாணத்தவர்க்கும் சிங்களருக்கும் எவ்வகையானதொடர்புமில்லையென்பதையும், சிங்களர் இலங்கைக்கு வந்த மலையாளிகளைப் புறக்கணிக்க, யாழ்ப்பாணத்தவர்களே அம்மலையாளிகளை யபிமானிக்கின்றார்களென்பதையும் இங்குள்ளார் மலையாள வாசிகளுக்கு ஒருவாறு வெளிப்படுத்தியமையினால் அந்த விபரீத விளக்கம் மலையாளத்தில் ஒருவாறு நீங்கி விட்டதென அறியலானேம்.

இரண்டாவதாக நேர்ந்துள்ள இடையூறெனிலோ, யாழ்ப்பாணத்தவர்களுக்குப் பெருந் திகிலையும் மனவருத்தத்தையும் ஆத்திரத்தையும் தரக்கூடியதெனலாம். சகோதரத்துரோகியாகிய விபீஷணன் தன்னைப் பாதுகாத்து வளர்த்து ஆளாக்கி அதிகாரங்களையுஞ் செல்வங்களையுங்கொடுத்த தன் சகோதரராகிய ராவணன் கும்பகன்னன் முதலியோர்க்குத் துரோகஞ்செய்து, உற்ற சமையத்தில் அவர்களைக் கைவிட்டு, இராமலட்சுமணருடன் சேர்ந்து தமயனுடைய ராச்சியத்தைத் தான் பெற நினைந்து, இராமருக்குத் துணையாக நின்றதோடு மாத்திரம் அமையாமல் தன் மரபினர்க்குரிய இரகசியங்களையும் இராமர் இலக்குமணருக்குச் சொல்லிக்கொடுத்து "கோடாலி தன்னுளே மரமது நுழைந்து தன் கோத்திரமெலாம் அழிக்கும்" என்ற பிரகாரம் தன் குலத்தோருக்கு நாசந்தேடிவிட்டான். அந்த விபீஷணன் தன் சகோதரருக்குச் செய்த செய்கை சண்டாளத்தனமானதென்றே இன்றும் அறிஞர் கூறுவர்.

இப்பொழுது மல்லாகத்தைச் சேர்ந்த பிறக்டர் அப்பாத்துரையென்னு மொருவர், இங்கிருந்து புகையிலை செய்யவும் பதனிடவும் பயின்ற சில தோட்டக்காரரோடு கூலியாட்களையும் கூட்டிக்கொண்டு தென்னிந்தியாவையடைந்து அங்குள்ள பாலைக்காடு கோயம்புத்தூர் கள்ளிக்கோட்டை முதலான இடங்களிற் புகையிலைக்கன்று நடுவித்துச் செய்கைபண்ணி யாழ்ப்பாணத்து முறையாகவே உலர்த்தியும் பதனிட்டும் யாழ்ப்பாணத்துப் புகையிலையென்று சொல்லி மலையாளத்திற் கொண்டுபோய் வியாபாரஞ் செய்கிறாராம். இவ்வருஷத்தில் இந்த அப்பாத்துரை யன்பவர் மலையாளத்திற்கு இவ்விதமாக அனுப்பிய புகையிலையின் தொகை 120 கண்டியாம். இவரைப் பின்பற்றிச் சென்ற இன்னுஞ் சில கமக்காரர் அனுப்பிய புகையிலையின் தொகை 200 கண்டியாம். எனவே 320 கண்டி புகையிலை தென்னிந்தியாவிலே செய்து உலர்த்தப்பட்டு யாழ்ப்பாணம் புகையிலையென்ற பெயரோடு மலையாளத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதென்பது வெளிப்படை. குறித்த அப்பாத்துரை செய்யுஞ் செயல் சரியானதோ என்பது ஆசங்கைக்கிடனும். அப்பாத்துரை மலையாளவாசிகளுடைய நன்மையைவிரும்பி, அவர்களுக்கும் இந்தப் புகையிலைச்செய்கை முறையை தாம் வஞ்சகமில்லாமற் பயிற்றிவிட்டால் அவர்களுக்கு லாபந்தானே என்ற எண்ணத்தோடு செய்திருப்பரேல் அச்செயல் பெருந்தன்மையானதாகும். இவர் யாழ்ப்பாணத்திற் செய்யப்படாத புகையிலையை யாழ்ப்பாணத்துப் புகையிலையென்று சொல்லிச் செலவழிப்பதே, இவருடைய நோக்கம் மேலானதல்லவென்பதையும் இவர் முழுவதும் தம்முடைய நயம் மாத்திரம் கருதிச் செய்கின்றாரென்பதையும் வெளிப்படையாகக் காட்டுகின்றதல்லவா. அப்பாத்துரையின் செயல் "கெட்டவன் குடி கெடட்டும் நீ குடி மிளகுசாற்றை" என்றவிதமாகவல்லவா இருக்கின்றது அரிசி நெல் முதலியனபோல் புகையிலையும் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு பொருளாகவிருந்தால், மலையாளத்திலும் இது செய்யப்பட்டு விருத்தியாவதையிட்டு நாம் அதிகங் குறைகூற இடமில்லை. அப்பாத்துரை மலையாளவாசிகளுக்கு இப்புகையிலைச் செய்கை முறையை மனப்பூர்வமாக எப்போதாயினுங் காட்டிக்கொடுப்பாரோ என்பது சந்தேகம். இச் சகோதரத் துரோகமான செயலைச் செய்ய வேண்டாமென, ஒரு காலத்திற் சட்டசபைத் தலைவராயிருந்த இவ்வப்பாத்துரையை மலையாளத்துள்ள புகையிலைத் தாகரும் யாழ்ப்பாணத்துள்ள புகையிலை வியாபாரிமாரும் தோட்டக்காரரும் கேட்டதுண்டாம். அவர் இவர்களுடைய வேண்டுகோளுக்கு இடங்கொடுக்கவில்லையாம். என்னை, "கொடிறும் பேதையுங் கொண்டதுவிடா" என்பது பழமொழியல்லவா. நிற்க,

நமது யாழ்ப்பாணத்தவர்கள் குறித்த அப்பாத்துரையையும் அவரைப் பின்பற்றிச் சென்ற சிலரையும் குறைகூறுவதனாலும் வைவதனாலும் நோவதனாலும் ஆவதொன்றில்லை நமது யாழ்ப்பாண நன்மக்களிலொருவராயிருந்த அவர் இப்படிக் கெட்டுப் போனாரே யென்பதையிட்டு இங்குள்ளார் மனம் வருந்துவதோடு, புகையிலை விலை குறையும்போற் காணப்படுதலினால் பசளை முதலியவற்றில் அதிக காசை வீணாய்ச் செலவிடுவதைக் குறைத்துச் செலவு சுருங்கக்கூடிய புதிய முறைகளை அநுசரித்து புகையிலையைச் செய்து நன்கு உலர்த்திப் பதப்படுத்தி உண்மையான யாழ்ப்பாணப் புகையிலை இதுவேயென்பதை ஏதும் அடையாளத்தினாலும் குணத்தினாலும் விளங்கவைத்து மலையாளத்திற்கு அனுப்புதல் வேண்டும். இந்த அப்பாத்துரை யாழ்ப்பாணத்தவர்கட்குச் செய்த பெருந்தீமை இதுவே யாதலால் இதனைக் காட்டிலும் மேலான தீமைசெய்ய அவருக்கு இனியிடமில்லையாகும். ஆதலால் அவரையிட்டு இனி நாம் அஞ்சவேண்டியதில்லை.

## உலகம் பலவிதம்.

இடமின்மையால் இம்முறைப் பிரசுரத்தில வெளியிடப்படவில்லை.

## வல்லை வெளியிற் சிங்களப் பெண்ணின் கொலை.

### அச்சுவேலி விதானை குமாரவேலு சொல்லிய சாட்சியம்.

"இந்தப்பெண்ணின் முகத்திலேனும் மூக்கிலேனும் எவ்வகையான ஊறுங்காணப்படவில்லை. பிரேதத்தை யெடுத்து ஒருவண்டியிலேற்றிச் சம்பத்திலுள்ள பழைய கொட்டிலொன்றிற்கொண்டுபோய்க் கிடத்தினேம். பிரேதம் மிதந்த இடத்தில் நீரினுள்ளே ஒரு வளையங்காணப்பட்டது. அந்த வளையத்தை இழுத்தெடுத்தபோது அதனுள் ஒரு திரிகைக்கல்லின் மேல் மூடியும் மாட்டப்பட்டுக் கிடந்தது. இந்த வளையம் பிணத்தின் தலை மாட்டிக் கிடந்தது. ஒருசாக்கும் குறித்த வளையத்தில் மாட்டப்பட்டபடி வெளியே எடுக்கப்பட்டது; வளையத்தோடு தென்னோலை ரெட்டுக்களும் மாட்டுண்டு கிடந்தன பிரேதத்தின்கையில் காப்புகள் காணப்பட்டன. மணியகாரன் வரும்போது பின்னேரம் 2-30 மணிவரையிலிருக்கும் யௌவனமான சிங்களப்பெண்ணின் பிரேதமென்பது உடனே எனக்குப் புலப்பட்டது. தண்ணீரிலிருந்து பிணத்தையெடுத்தபோது உடம்பில் எங்கேனும் இரத்தக்கறை காணப்படவில்லை. ஆனாற் பாலத்தின் சுவரில் இரத்தக்கறை காணப்பட்டது.

### அச்சுவேலி இளையதம்பி சபாரத்தினம் சொன்ன சாட்சியம்.

"குறித்ததினத்தன்று நான் வல்லைவெளிக்குப் புல்லுச் செதுக்கப்போயிருந்தேன். செதுக்கிக்கொண்டு மீண்டுவரும்போது பாலத்தடியில் இரண்டுமூன்றுபேர் தெருவில் நின்று தண்ணீரிற் குனிந்து பார்த்துக்கொண்டு நிற்பதைத் கண்டேன். நானும் எட்டிப்பார்த்தபோது ஒருபெண்ணின் பிணமாகக்கிடக்கக்கண்டு உடனே அச்சுவேலி விதானைக்குத்தெரிவித்தேன். நான உடனே விதானையோடு கூடிக்கொண்டுபோகவில்லை. ஆனாற் கொஞ்சஞ்செல்ல அந்த இடத்திற்குப் போனேன்"

### வண்ணார்பண்ணை கன்னாதிட்டியில் வசிக்கும் அந்திரிஹாமி சொன்னசாட்சியம்.

"நான் யாழ்ப்பாணத்தில் 18 வருடகாலமாக வசிக்கிறேன்; நான் சாதியிற் சிங்களவன்; கன்னாதிட்டியில் மாத்திரம் சென்ற 12 வருடங்களாக வசிக்கிறேன்; நான் பட்டடைவைத்து வேலைசெய்யுமிடம் செல்லையாமணியம் வீட்டிற்கு அயலிலுள்ளது; அந்தவீட்டிற்கும் என்னுடைய இடத்திற்குமிடையே மதிலுண்டு; ஏழு எட்டு மாசமாக இந்தச் சிங்களப்பெண் மணியகாரன் வீட்டில் வேலையாக நின்றதை நான் அறிவேன்; ஏறக்குறைய 1½ மாசத்திற்குமுன்னர் அவள் மணியகாரன் வீட்டை விட்டுப் போய்விட்டாள். அவளை நான் கண்டிருக்கிறேனேயல்லாமல், அவளுடன் ஒருபோதும் நான் பேசியதில்லை; எலிசா என்றுதான் அவளைச் சொல்வது."

### அராலி வண்ணான் காசி நாகலிங்கன் சொன்ன சாட்சியம்.

"பத்துப்பன்னிரண்டு வருஷகாலமாக நானே மணியகாரன் வீட்டிற்குச் சீலை வெளுத்து வருகிறேன்; அவர் வீட்டிலே நின்ற சிங்களப்பெட்டையை எனக்குத்தெரியும்; நான் இடையிடையே துணிகொடுக்கவும் எடுக்கவும் மணியகாரன்வீட்டிற்குப் போவதுண்டு; ஒவ்வொரு குடும்பத்தாருடைய துணிகளுக்கு ஒவ்வொரு அடையாளங்கள் போட்டுக்கொள்ளுவோம்; மணியகாரன்வீட்டுத் துணிகளுக்கு V என்ற அடையாளம் இட்டுவருகிறேன். அவர்கள் வீட்டுத்துணிகளெல்லாவற்றிற்கும் V என்ற அடையாளந்தான் இடுவது (ஒருதுணியைக் கோட்டார் காட்ட) இப்படியான துணி அந்தப்பெண் உடுத்திருந்ததுதான்; இந்தத் துணி அவளுடையதாகத்தான் இருக்கவேண்டும்."

நாவிதன் ஞானமுத்துவையும் பொன்னையாவையும் பிணையில் விடும்படி தாணிமார் கேட்டபோது நீதிபதி பிணையில் விட மறுத்து விளக்கத்தை ஜூலாய்மீ 23௳ தவணையிட்டனர்.

## "காந்திமாமா"வின் கடிதம்.

—0—

### ஆங்கிலப்பாலரும் "அரைநிருவாணப்பக்கிரி"யும்.

காந்தியடிகள் வட்டமேசை மகாநாடு சம்பந்தமாக லண்டனில் நின்றபோது, அந்நாட்டுக் குழந்தைகளுடன் கூடிக்குலாவிச் சிரித்து விளையாடி விநோதமாகப்பொழுது போக்கிக்கொண்டிருந்தார். அக்குழந்தைகள் அடிகளுக்குச் சில வெகுமதிச்சாமான்கள் அளித்தனர். அவர் அவற்றைத் தமது ஆச்சிரமத்திலுள்ள குழந்தைகளுக்குக் கொடுப்பதாக லண்டன் குழந்தைகட்கு வாக்குப்பண்ணினார். இப்போது அவர் லண்டன் குழந்தைகட்கு ஓர் நிருபம் அனுப்பியிருக்கிறார் அதுவருமாறு:—

"சிறையிலிருந்து கடிதம் பெறுவதை நீங்கள் வேடிக்கையாகக் கருதுவீர்கள். உண்மையாக அது ஒரு வேடிக்கைதான். சிறையில் இருந்தும் நான் ஓர் சிறையாளனென்ற எண்ணம் எனக்கில்லை. நான் பிழைசெய்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நான் பால்மணம்மாறாப் பாலகராகிய உங்களையே சதா நினைத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுடன் தங்கியபோது ஒருநாள் பிற்பகல் நான் உங்களுடன் அளவளாவிச் சம்பாஷித்தது உங்களுக்கு ஞாபகமிருக்கும். நான்கேட்ட கேள்விகளுக்கு நீங்கள் எவ்வளவு அழகாக விடைபகர்ந்தீர்கள்! நீங்கள் அனுப்பியிருக்கும் வெகுமதிச் சாமான்களையிட்டு நன்றிபாராட்டி உங்களுக்குக்கடிதம் எழுதுவதற்கு எனக்கு அவகாசம் இடைக்கவில்லை. இக்கடிதத்திலேயே உங்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

"நீங்கள் எனக்கு அளித்த வெகுமதிச் சாமான்களை ஆச்சிரமச் சேயருக்கு அனுப்ப எண்ணியிருந்தேன். ஆனால் என்னால் ஆச்சிரமத்திற்குப் போகமுடியவில்லை."

உங்கள் அனைவருக்கும் என் அன்பு உரியதாகுக.

இங்ஙனம்,
நீங்கள் "காந்திமாமா"
என்றழைக்கும் அன்பன்.

## சமாசாரத் திரட்டு.

—: :—

### மாவிட்டபுரத்திற் சண்டை.

சென்ற இரவு (27-7-32) 10 மணிவரையில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த சிலர் ஏதோ பழைய வைரம் காரணமாக கட்சிசேர்ந்து சண்டையிட்டார்களென்றும் சண்டைக்காரரில் ஒருவர் வெட்டுக்காயமடையச் சிலர் மண்டையுடையப் பெற்றார்களென்றும், பொலிசர் சண்டையை அடக்கிக் கலகக்காரருட் சிலரைப் பிடித்துக்கொண்டுவந்து சிறைப்படுத்தி யிருக்கின்றார்களென்றும் அறியலானேம்.

### சர்வகட்சி மகாநாடு.

இலங்கைச் சர்வகட்சி மகாநாட்டின் இரண்டாவது கூட்டம் வருகிற சனிக்கிழமை (30-7-32) பிற்பகல் 3 மணியளவில் கொழும்பு டார்லி வீதியிற் கூடும்.

### இலங்கைப் பிரதம காரியதரிசி.

இலங்கைப் பிரதமகாரியதரிசியாகவிருந்த சேர் பேர்னுட் பூர்டிலங் அவர்கள உகண்டா நாட்டிற்குத் தேசாதிபதியாகச் சென்றதால் பிரதிக்காரியதரிசியாகவிருந்த மிஸ்ரர் F. G. ரிறல் அவர்கள் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று ஒருசெய்தி கூறுகிறது.

### யாத்திரீகர்களை மிரட்டிப் பணம் பறித்த பஸ்சாரதி.

S 573-ம் இலக்க "பஸ்"ஸின் சொந்தக்காரனான A. R. அமரதாஸ் என்பவனும் சாரதி S உப்பாரக அப்பு என்பவனும் சென்ற 19௳ பொய்யான தகவல்களைக் கூறிக் கதிர்காமயாத்திரீகர்களை மிரட்டிப் பணம்பறித்ததாக 21-ம் தேதியன்று மாத்தறைப்பொலிஸ்ஸ்தலத்தில் வழக்குத்தொடரப்பட்டது. முதலாவது எதிரிதான் நிரபராதியெனக் கூறினான். இரண்டாவது எதிரி குற்றத்தை ஒத்துக்கொண்டான் நீதிபதி அவனுக்கு 6 மாதக் கடூழியச்சிறைத்தண்டனை விதித்தனர்.

### பரிதாப மரணம்.

சென்ற 18-ந்திகதி இரவு கதிர்காமத்தில் இருந்து 35 வயதுள்ள மீனாட்சியென்ற ஓர் பெண் மோட்டார்பஸ்மூலமாக தனது வசிப்பிடமாகிய தங்காலைக்கு வரும வழியில் மோட்டர் "பஸ்"ஸில இருந்து திடீரெனக் குதித்தமையால் மரணமடைந்தாள். அவள் மோட்டார் பஸ்ஸில் வரும்போது, அதன்கீழ் தூசிப்படலம் தெரிந்தது. அதனைநோக்கிய ஓர்பிரயாணி ரதத்தில் நெருப்புப்பிடித்துவிட்டது என்று உரத்துக்கூறினான். அதைக்கேட்ட மீனாட்சி பயந்து ஓடிக்கொண்டிருந்த மோட்டர்பஸ்ஸின் கதவைத் திறந்து கீழே குதித்தாள். அதனால் அவளுடைய மண்டை உடைந்து உடனே மரணமடைந்தாள்.

### திருப்வண்டியில் மேலதிகமான பிரயாணிகளை ஏற்றலாம்.

சிலநாட்களின் முன்னர் கொழும்பிற் பொலிசர் "திருப" வண்டியிற் குறித்த தொகைக்கு மேற்பட்ட பிரயாணிகளை ஏற்றிச் சென்றனரென்று திரும வண்டி ஓட்டுபவர்மீது வழக்குத் தொடர்ந்திருந்தனரென இப்பத்திரிகையில்வெளியிட்டிருந்தோம். இதுவேஇவர்கள அவர்களமேல் வைத்த முதல்வழக்காகும். நீதிபதி இவ்வழக்கை விளங்கி, திருமவண்டியில ஏறுபவர்களையும் இறங்குபவர்களையும சாரதி கணக்கிட முடியாதென்றும் திரும்வண்டியிற் பிரயாணிகள் இருந்து போவதுமாத்திரமல்லாமல நின்றுபோவதற்கும் பிரமாணம இடங்கொடுக்கு மாதலால திரும் வண்டியில மேலதிகமாகவும் ஏற்றலாமென்ற கருத்துப்படக் கூறிப பொலிசர் வைத்த வழக்கைத் தள்ளிவிட்டனர்.

# இனிச்செய்யவேண்டியதுஎன்ன?

## ஈழநாட்டின் முன்னைய பெருமை.

### இருந்திருந்து கால்நீட்டிய தந்திரம்.

### நீர்மேல் எழுத்தனைய வாக்குத்தத்தம்.

—:0:—

அதனை நம்புவோருக்கு விளைவது அநர்த்தம்.

—:*:—

(மதுரை, ஸ்ரீ. S. K. சுப்பிரமணியம் அவர்கள் எழுதுவது.)

எமது ஈழநாடு பரதகண்டத்தைப்போல அக்காலம் பொன் விளை பூமியாய் இருந்தது. பொருளாதார நிலைமையில் மிக்க அபிவிருத்தியுற்றிருந்தது. ஆனால் இப்போது எவ்வாற்றானும் மிக்க கேவல நிலைமையிலிருக்கிறது. எவ்வாறு நாம் எம்நாட்டை மீட்கலாம்?

கிழக்கே, தற்போது சிங்கப்பூர் எனப்படும் நகரம் வரைக்கும், வடக்கே குடகம் (மைசூர்) வரைக்கும், முன்னைநாள் எம் இலங்கை ஆதிக்கஞ் செலுத்திவந்தது. உரோமர், பபிலோனியர், பினிஷியன்ஸ், ஸரஸென்ஸ் எனப்படுஞ் சாதியார் ஆதிக்கத்துக்கு வரமுன், எம் இலங்காதேவியானவள் தனியாசு செலுத்திவந்தாள். இயேசுநாதர் பிறக்குமுன், சிர்திருத்தம் இன்னது, நாகரீகம் இன்னது என்பதனை அறியாது மேனாட்டுமக்கள் வசித்தகாலத்தில், எம் இலங்காமக்கள் எவ்வாற்றானும் சிறந்து விளங்கினர். எம்நாடு குபேரன் வசித்த பூமி; 10 மைல் விஸ்தீரண முள்ள மாளிகையில் வசித்த திரிலோக சக்கராதிபதியாகிய இராவணேஸ்வரன் விளங்கிய செல்வபூமி. எம்நாட்டின் பண்டைய நிலைமையும் சிறப்பையும் வால்மீகி வாப்பிரசாதியாகிய கம்பநாட்டாழ்வானே விதந்து கூறியிருக்கின்றானென்றால் அதன்பெருமையைக் கூறவும் வேண்டுமோ?

### கண்டி உடன்படிக்கை.

19-வது நூற்றாண்டின் முற்பகுதியில் நெப்போலியன் பொனப்பாட் என்ற யுத்தவீரன் பிரான்சியச் சக்கரவர்த்தியாகி ஐரோப்பாவெங்கணும் மிக்க அதிகாரஞ் செலுத்திவந்தான். அவனுடையபடைகள் இந்தியாவைக் கைப்பற்றிவிடுமோ என்ற அச்சம் பிரிட்டிஷார்மனதிற் சதாகுடிகொண்டிருந்தது. இந்தியாவைக் காப்பதற்காக அயற் றுறைமுகங்களைப் பெலப்படுத்துதல் அத்தியாவசியகமாயிற்று. அக்காலம் இலங்கை ஒல்லாந்தர் வசம் இருந்தது. இலங்கையைப் பெற்று அதனைப் பெலப்படுத்திக் காவல் செய்தால் இந்தியநாட்டைப் பகைவர் பிடிப்பது அசாத்தியம் என்பதை ஆங்கிலர் உணர்ந்தனர். எனவே தம் ஆதிக்கத்தில் இருந்த ஜாவாத்தீவை ஒல்லாந்தருக்களித்து அதற்குப்பதிலாக ஒல்லாந்தரிடமிருந்து இலங்கைத்தீவைப்பெற்றனர். இது நடந்தது 1815-ம் ஆண்டில். இது சரித்திர உண்மை. இதே வருஷத்திற்றான் கண்டி மகாணங்களை ஆட்சிபுரிவதற்கான உடன்படிக்கையொன்றை அவ்வூரவர்களிடமிருந்து ஆங்கிலர்பெற்றார்கள். அவ்வுடன்படிக்கையை ஓர் குத்தகையென்று கூறலாம். 99 வருஷத்திற்கு ஆட்சிபுரிவதென்பதே அதனுறுதி வாசகம். அக்காலம் நெப்போலியனின் மூரசொலியைக் கேட்டு வர்த்தகச் சாதியினராகிய ஆங்கிலர் அடிதடித்தனர். தங்கள் ஜென்மபூமியையும் கடற்கப்பால் உள்ள தங்கள் பிரதேசங்களையும் நெப்போலியன் கைப்பற்றித் தமது வர்த்தகத்திற்கு உலைவைப்பானென்று இந்த வர்த்தகசாதியார் நடுங்கினர். இதுதான் உண்மை. இத்தகைய நிலைமையில் இருந்த ஆங்கிலர், "நாம் இலங்கையை வெற்றிபெறவேம்; அது எங்களினதே; அது எங்களுடைய பிரதம குடியேற்ற நாடாகும்" என்று இப்போது உரித்தாடுகின்றார்கள். இது நீதியாகுமா? சீர்திருந்திய உலகமக்களே உண்மைத் தீர்ப்பை அளிப்பார்களாக.

சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்தில் இங்கிலாந்து உலகோரைநோக்கி "ஜெர்மனியதேசம் உலக சாதியார்க்கிடையே யுள்ள சமாதான உடன்படிக்கைகளை மீறிவிட்டது. சிறிய தேசங்களை ஜெர்மனி விழுங்க முனைந்து விட்டது. அச்சிறிய தேசங்களின் உரிமைகளைக் காப்பதற்காகவே நாங்கள் ஜெர்மனியருடன் போர் புரிய முன்வந்திருக்கின்றோம்" என்று வாய்ப்பறைகொட்டினார்கள். அப்படிக் கூறிய இங்கிலாந்துதான் இப்போது ஏதோ ஒரு உடன்படிக்கைச் சாட்டின் பேரில், சிறு இராச்சியங்களைத் தன்வசம் வைத்திருக்கின்றது. ஜனநாயக ஆட்சி அளிப்போம் என்று அந்நாடுகளைநோக்கி இங்கிலாந்து கூறுகிறது ஆனால் உண்மை அப்படியென்று கடைசியில் எல்லாம் தன்னுடைய சொந்தம் என்று வாதாடி உரிமைசெய்வதற்கு இங்கிலாந்து இவ்வித தந்திரத்தைக் கைக்கொள்ளுகிறது. இது தருமமா? நீதியா? இது சட்டசம்மதமாகுமா? 99 வருஷத்திற்கு என இலங்கையை இங்கிலாந்து ஆட்சி எடுத்தது. ஆனால் இந்த 99 ஆண்டுகளின் பின்னர் எல்லாம் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மெல்ல மெல்ல மறக்கப் பட்டுவிடும் என்பதுதானோ பிரிட்டிஷாரின் கொள்கை? ஆம். அதுதான்.

### உண்மையென்ன?

லண்டன் பாராளுமன்றத்தில் இந்திய இலங்கை சம்பந்தமாகப் பல கேள்விகள் இதுகாறும் கேட்கப்பட்டு விட்டன அக்கேள்விகள் எண்ணிலடங்கா. ஆங்கு நடந்தவிவாதங்கள் கேட்கப்பட்ட கேள்விகள், இறுக்கப்பட்ட விடைகள் என்பனவற்றை நாம் உற்று நோக்கும்போது 100 சதவிகிதப் பின்னும் மேனாட்டார் அரசியற் சுதந்தரத்தைத் தம் அதிகாரத்துள் இருக்கும் அடிமை நாடுகளுக்கு அளிக்க ஒருப்படார் என்பது தெளிவாகிறது, ஆனால் "உங்களுக்குப் படிப்படியாகச் சுதந்தரம் அளிப்போம்" என்று அநேகம் முறைகளில் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வாக்குறுதிகளை நீர்மேல் எழுத்துக்கு ஒப்பிடலாம். அவர் வாக்குறுதிகளில் நாம் ஒருவிதமான நம்பிக்கையும் வைக்கவொண்ணாது என்பது அநுபவம். அவர்கள் வாக்குறுதி செய்வதென் நோக்கம் நாட்போக்குவதற்கேயன்றி வேறொன்றுக்குமல்ல. கடற்படையைப் பெருப்பிக்கும்தொழிலிலும், தன் தரைப்படையைக்கூடிய சீக்கிரத்தில் ஓரிடத்தில் வரவழைப்பதற்கான புகைரத மார்க்கங்களைத் திறப்பதிலும், ஆகாசப் படையை அதிகரிப்பதிலும் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவளிக்கும் ஓர் அந்நியநாடு பிரசை நாடுகளை நோக்கி "ஓர் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தி அதனை உம் பொறுப்பில் விடுதலே எங்கள் இறுதி நோக்கம்" என்று கூறினால், அப்பிரசைநாடுகள் அக்கூற்றை நம்பலாகுமா? "நீரும் உமது மூதாதையரும் காலந்தோறும் அளித்து வந்த வாக்குத்தத்தத்தை மறந்துவிடவேண்டாம். எமது பிறப்புரிமையாம் சுயராச்சியத்தையளியின்" என்று கூறியதைவிட வேறு ஒரு குற்றமும் அறியாத பல்லாயிரக்கணக்கான ஆடவர் மகளிர் பாலர் விருத்தர் ஆதியோரையும், லண்டன் பாராளுமன்றத்தில் உள்ள அவர்கள் தாமும் ஈடாகாத அறிஞரையும் சிறைச்சாலையில் அடைத்து வைக்கும் ஓர் அரசுதானா தன்வாக்குத் தத்தத்தை நிறைவேற்றக் கூடியது?

பஞ்சதந்திரத்தில் ஒருகதையுண்டு. ஒருகாட்டிலே ஓர் நரியும், கழுதையும், ஓர் சிங்கமும் இருந்தன. கழுதையை உண்ணவேண்டிச் சிங்கம் நரியிடம் புத்தி கேட்டது; நரி ஓர் யுக்திசெய்துகொண்டு கழுதையிடஞ்சென்று, "உம்மீது மிருகேந்திரனாகிய சிங்கம் காதல்கொண்டு உம்மை மணம்புரிய விரும்பினார்" என்றது. மிருகேந்திரனாகிய சிங்கம் உண்மையில் கழுதைமீது காதல்கொண்டதா? இல்லவேயில்லை. அக்கழுதையை உண்பதற்காகநரிசெய்தயுக்தியே அது. இதுபோலத்தான் நமது நிலைமையும். நமக்குச் சுதந்தரம் அளிப்போம் என்று அதிகார வெறிகொண்டவர் கூறினால் அதை நாம் நம்பலாகுமா? கைக்கிலே மருந்து இருக்கிறது. அதைப்பிரயோகித்தாற்றான் எம் பகைவர் நாமகோரியதை அளிப்பார்கள்.

### பரிகாரம்.

இப்போது நாம் செய்யவேண்டியது என்ன? குடிசைக் கைத்தொழில்களை மறுபடியும் வளர்க்கப் படுத்தி வளர்ப்பதிலேயே எங்கள் மீட்சி தங்கியிருக்கின்றது என்பது எனது கொள்கை. பருத்தி கரும்பு முதலியனவற்றையுண்டாக்கி, இப்போது காடாய்க் கிடக்கும் நிலங்களைப் பழையபடியும் பொன் விளை நாடாக்க வேண்டும் தற்போதைய உலக நிகழ்ச்சிகளைக் கண்ணுறும் தேசாபிமானிகள் எனது திட்டம சமையோசிதமானதே என்றுகூறுவார்கள். அதற்குத்தக்க ஆதரவளிப்பார்கள் என்பதே என் தாழ்மையான கோரிக்கை.

கேவலம் உலகப்பொருள்களையே தஞ்சமென நம்பி வாழும் மேனாட்டாரின் நாகரிகப் பேயினின்றும் நாங்கள் தப்பியோட வேண்டுமானால், நாமும் ஒருசாதியார் என்பதை உலகோருக்குக் காட்ட வேண்டுமானால், உலகோரோடு நாமும் சேர்ந்து முன்னேற்றம அடைய வேண்டுமானால், எமது இலங்காதேவியைத் தூக்கத்தினின்றும் எழுப்பவேண்டும். அவள் அநேக காலமாகக் கண்ணைத் துயின்று அவமே காலத்தைக் கழித்துவிட்டாள்.

எமது லட்சியத்தை அடைதற்காகப் பின்வருங் கருமங்கள் ஆற்றப்படல்வேண்டும் என்பது எனது கொள்கை.

1. நீர்ப் பாய்ச்சுவதற்கு வசதியான இடத்தில் 50,000 ஏக்கர் நிலத்தை நாம் பெற்று அங்கு ஆண்டு முழுவதும் கருப்பஞ் செய்கை செய்தல்வேணடும்.

2 நூல் நூற்றற்கும், சீனி சுத்தஞ் செய்வதற்கும், மாங்களிலிருந்து தளபாடங்கள் செய்வதற்குமாக நீராவிச் சக்தி கொண்ட ஓர் கைத்தொழிற் சாலையை ஸ்தாபிக்கவேண்டும். அங்கு ஆக்கப்பட்ட பொருள்களைப் பிறதேசங்களுக்கு அனுப்பி விற்கவேண்டும். எங்களுடைய பணமும் வெளிநாடுகளுக்குச் செல்லாது.

3. இலங்கையில் உள்ள கிராமங்கள் தோறும் கைராட்டினத் தொழில் ஸ்தாபித்தல்.

4. நக் நம்பிக்கையைப் பற்றியும் அந்நிய பொருள்களும் எமக்குத் தீமை விளைவிப்பனவுமான மண்ணெண்ணெய், காப்பி அந்நிய குடிவகைகள், அந்நியத் துணிகள் என்பனவற்றைப் பகிஷ்காரம் செய்ய வேண்டியதைப் பற்றியும் ஜனங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

5 தற்போதைய நிலைமையை நோக்கிப் பாராமுகமாயிருப்பதால் வரும் அபாயங்களைப்பற்றி நாடெங்கணும் வாரந்தோறும் பிரசாரவேலை செய்யவேண்டும்.

இனியேனும் நாம் கண்விழிக்கா விட்டால் நாம் மீட்சிபெறுவது சந்தேகம் என்பதை மக்களுக்குப் போதிக்கவேண்டும்.

# ஆண்டன்மையுண்டேல் அடிமைத்தனமேது?

## கிராமப் புநருத்தாரணம்.

### அரசாங்க உத்தியோகத்தர்கள் செய்யக்கூடியது.

[ஸ்ரீமத் சுவாமி பவித்திரானந்தா அவர்கள் "பிரபுத்தபாரத" பத்திரிகையில் எழுதி... மொழிபெயர்ப்பு ]

(25-7-32-ன் தொடர்.)

பாரதநாட்டிலும், முற்காலத்திருந்த ஜமீந்தார்கள், அதாவது கிராமப்புறங்களில் பாரிய பண்ணைநிலங்களை வைத்துப்பயிர்செய்தவர்கள், கிராம முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர். தத்தம் கிராமத்தின் செல்வத்தை விருத்திசெய்வதிலும் அங்குள்ள பொதுஜனங்களின் நிலைமையைச் சீர்திருத்துவதிலும் இந்த ஜமீந்தார்கள் கண்ணும் கருத்துமாயிருந்தனர். குளங்கள் தோண்டுதல், கிணறுகள் தோண்டுதல் அறிவுக்கேதுவாய சந்நிதானங்களைச் செய்வித்தல், ஆலயங்கள் பிரதிஷ்டை செய்தல், கிலமாய்க் கிடப்பனவற்றைப் புதுக்குவித்தல் முதலாம் கருமங்களைச் செய்து கிராம நலனை வளர்த்தல் தம்மைப் பொறுத்த கடன் என அக்காலத்திருந்த ஜெமீந்தார்கள் உணர்ந்தனர்.

ஓர் ஜெமீந்தார் வீட்டில் ஓர் விசேஷ சம்பவம் நடந்தால் அவர் ஜாதிபேதமின்றி கிராமத்தார் எல்லோரையும் தமது வீட்டிற்கழைத்து விருந்திடுவார். இப்படிச் செய்வதினால், அவர்க்கும் கிராமத்தார்க்கும் இடையேயுள்ள அன்பு மென்மேலும் ஓங்கி வளர வதுவாய் இருந்தது. வரும் கொள்ளைநோய் அல்லது பஞ்சம் அக்கிராமத்திற் பரவிவிட்டால் கஷ்டங்களை நீக்கத் தியாகஞ்செய்யும் தொழிலில் அந்த ஜெமீந்தாரே முன்னணியில் நின்று தொண்டு ஆற்றிவந்தார். ஆனால் அக்காலம் மலையேறிவிட்டது. மேனாட்டு நாகரீகப்பேய் எம் நாட்டினிடைப் புகுந்ததால், எமது கிராம நிலைமை மாறிவிட்டது. கிராமவாழ்க்கை அபாயகரமான ஓர்மாற்றத்தை அடைந்துவிட்டது. இப்படிக் கேவலநிலைமையுற்ற கிராமவாழ்க்கையை மாற்றி அமைப்பதென்றாலோ அது தற்போதைய தேசாபிமானிகள் எனப்படுவோரால் முடியும் காரியமல்லப் போல் தோன்றுகிறது. கிராமங்களைப் புனருத்தாரணம் செய்யக்கூடிய நிலைமையில் உள்ளவர்கள் எமது கிராமத்தைவிட்டு வெளியேறி நகரவாழ்க்கையில் ஈடுபடுகின்றார்கள், நகரங்களிற் பிறந்து, நகரங்களில் வளர்ந்தவர்கள் கிராமப் புனருத்தாரணம் செய்வோம் என கிராமங்கட்குச் சென்று நவீனமான முறைகளைக் கையாடுகின்றனர். அவர்களின் பிரயத்தனங்களால் ஆம்பயன் ஒன்றுமில்லை. கிராமத்தவர் அவர்களின் போதனைக்குச் செவி சாய்ப்பார்கள் என்பது அசம்பாவிதம்.

இப்போது பிரதானமாகச் செய்யவேண்டியது என்னவென்றால், மக்களாய்ப்பிறந்தவர் எல்லோரும் ஒருவர்க்கொருவர் பரஸ்பர நேசபான்மையுடன் இருந்து ஒருவர்க்கொருவர் உதவி புரியவேண்டும் என்ற உணர்ச்சியைக் கிராமத்து மக்களிடை தூண்டிவிடுதலேயாம். மக்கள் எல்லோரும் ஒருவர்க்கொருவர் பணிசெய்து கிடப்பதே கடன் என்ற உணர்ச்சியை கிராமவாசிகளிடை தூண்டவேண்டும். ஒருவர்க்கொருவர் உதவிசெய்வது முற்காலத்திக் கிராம மக்களின் சமய வாழ்க்கையின் அமசமாகவிருந்தது.

முன்பின் அறியாதவர்களைத் தானும் அக்காலத்துக் கிராம மக்கள் எதிர்கொண்டழைத்து நல்வரவு கூறி அமுதூட்டி அகமகிழச் செய்வார்கள். அயலான் பட்டினியிருக்க உண்பது பாவம் என அக்காலத்து மக்கள் எண்ணியிருந்தனர். ஒரு கிராமத்தில் உள்ள ஓர் குடும்பம் கஷ்ட நிலைமையை யடைந்துவிட்டால், அக்குடும்பத்தினர்க்கு அக்கிராமத்தவர் எல்லோரும் முன்வந்து உதவிசெய்து அவ... மேனிலைக்குக் கொண்டுவந்து விடுவா... மேனாட்டு நாகரீகம் தேசியவாழ்க்கையின் பக்கத்திலும் நுழைந்து விட்டதால் ... தானும் மிக்க கேவல நிலைமையை ய... விட்டது. பொருளாதார விஷயமாகக் ... மத்தவர்கள் மிக்க கஷ்டமுறுகின்றனர். ... டிக் கஷ்டமுறும் அவர்கள் மற்றவர்களின் ... டத்தை நீக்க முன்வருவதெப்படி?

எனினும், நாங்கள் எங்களுடைய கிரா... களை முன்னிருந்த நிலைமைக்குக் கொண்... வேண்டுமானால், சேவைசெய்ய வேண்டுமெ... உணர்ச்சியை மக்களிடை பரப்பவேண்... இறைவன் பேரைச் சொல்லியும் சமபந்... போசனச்சொல்லியும் எல்லாவற்றையு நிப... செய்த அநேகர் எம்நாட்டில் இருக்கின்ற... அரசியல்விஷயத்திலும் எல்லாவறறையும் தி... கம் செய்த எத்தனையோ பேர் நம் நாட்... உண்டு. தங்கள் தங்கள் கிராமங்களைப் பு... ருத்தாரணம்செய்து, கிராமமக்களின் நல... காக எல்லாவற்றையும் தியாகம் செய்ய... புருஷர்கள் இப்போது எமக்குத் தேவை; கி... மப் புனருத்தாரண வேலையையே லட்சியமா... கொண்ட தேசாபிமானிகள் இப்போது வே... டும்.

தற்காலிகமான ஓர் தேவைக்கு அநேகர் மு... வருகிறார்கள். உதாரணமாக ஒரு கிராமத்... வெள்ளப்பிரவாகம் ஏற்பட்டுவிட்டால், அல்ல... பஞ்சம் நேர்ந்து மக்கள் கஷ்டப்பட்டால், ... கஷ்டத்தினை நீக்க அநேகர் முன்வந்து ச... உதவியும் பண உதவியும் செய்கிறார்கள். இ... போது எமக்குத் தேவையென்னவென்ற... நீடித்த காலத்துக்கு நிற்கக்கூடிய வேலைகளி... பொருட்டுச் சேவைபுரியக்கூடிய தொண்ட... களேயாம். இத்தகைய தொண்டர்களைக் கி... மப் புனருத்தாரண வேலையின் பொருட்டு இ... விதமாகப் பெறலாகும். (1) கிராமங்களி... பிறந்து, கிராமங்களில் வளர்ந்த கல்விவாசனை... யுள்ள வாலிபர் நகரவாழ்க்கையை விரும்பா... தத்தம் சொந்தக் கிராமங்களிலேயே வசித்த... கிராமப் புனருத்தாரணவேலை செய்தல் (2... கிராமங்களிலேயே வசிக்கவேண்டியவர்களுக்கு... அவர்கள் புனருத்தாரண வேலை செய்வதற்கு... அநுட்டிப்பமாக வெளியூரில் உள்ளவர்கள் எது... உதவிசெய்தல்.

கிராமங்களைச் சீர்திருத்துவதில் அரசினர் எவ்வளவோ செய்யலாம். உண்மையாக சேவை செய்யவேண்டுமென விரும்பும் உத்தியோகத்தரை அரசினர் உடையவராய் இருப்பின், அவ்வுத்தியோகத்தரால் கிராமப் புனருத்தாரணவேலை செவ்வனே நடைபெறும். பாஞ்சாலத்தைச் சேர்ந்த குர்காவன் என்ற பிரிவிற்கு மிஸ்டர் F. L. பிரெயின் I. C. S. அவர் அதிகாரியாய் இருந்தார். அவர் கடமைபார்த்த சொற்பகாலத்திற்குள் குர்காவன் என்ற நாடு மிக்க அபிவிருத்தியடைந்தது. ஜனங்களுக்கு உண்மையாகவே நன்மை புரியவேண்டும் என ஒரு உத்தியோகத்தர் விரும்பினால், அவர் அனப்பில நன்மைகளைச் செய்து முடிக்கலாம் என்பதை மிஸ்டர் பிரெயின் அவர்களின் தொண்டு தெள்ளிதிற் புலப்படுத்துகின்றது. அவர் தமது அநுபவங்களை "இந்தியக் கிராமப் புனருத்தாரணம்" (*The Remaking of Village India*) என்ற ஓர் நூலில் வெளியிட்டிருக்கிறார். இத்தகைய தொண்டில் ஈடுபடும் ஒவ்வொருவர் வசமும் மேற்படி நூல் இருப்பது அத்தியாவசியகமாகும். —(வரும்.)

E JAFFNA BENEFIT COMPANY.

## வட இலங்கை ஏலச்சீட்டுக் கம்பெனி.

(றெஜிஸ்தர் பண்ணப்பெற்றது)

o. 211. இரண்டாம் குறக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

சம் 20 ரூபா விகிதங்கட்டவேண்டிய எங் வகுப்பு 500 ரூபாச் சீட்டின் முதலாம் சென்ற சனிக்கிழமை கூறிக்கொடுக்கப் து. அதிகம் உயர்ந்த கேள்வி 231. 2-ம் ப்பணத்தின்பேரால் 1932-ம் ஆ ஆக ீ 13உ யன்று அல்லது அதற்குமுன் கட் ண்டிய பணம் ரூபா 12—17 மாத்திரமே.

டுத்த ஏலத்திகதி 1932-ம் ஆ ஆகஸ்ட் மீ 20உ பிற்பகல் 4½ மணி.

சம் 5 ரூபா விகிதம் கட்டவேண்டிய எங் புதிய D வகுப்பு 125 ரூபாச் சீட்டின் முத சீட்டு இந்த ஜூலை மீ 30உ சனிக்கிழமை கல் 4-30 மணிக்குக்கூறிக்கொடுக்கப்படும்.

தம் 40 ரூபா விகிதம் கட்டவேண்டிய எங் A வகுப்பு 1000 ரூபாச் சீட்டின் முதல ம் 1932-ம் ஆ ஆகஸ்ட் மீ 13உ சனிக் மை பிற்பகல் 4 மணிக்குக் கூறிக்கொடுக் ப்

வகுப்பு A வகுப்புச் சீட்டுகளிலே சேர ம்புவோர் உடனே சேரவும்; அன்றேல் முடியாது காலதாமதமாகிவிடும். B வகுப் சீட்டிற் சேரவிரும்பியவர் அநேகர் கடைசித் த்தன்றே மனுவனுப்பியபடியினுல் சேர லாமற்போய்விட்டது.

க்கள் C வகுப்புச் சீட்டின் முதலாவது சீட் இரண்டாவது ஏலம் 1932-ம் ஆண்டு ஆக மீ 10உ புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ாத்தப்படும். அப்போது அதே வகுப்பில் ண்டாம் தொகுதியாயுள்ளதும் C வகுப்பு து என்று சொல்லப்படுவதுமான சீட்டும் பிவிற்கப்படும். அப்போது அதற்குரிய ப்பு முற்றப்பெற்றுல்தான் அந்த ஏலம் கூறி க்கப்படும். சேரவிரும்புவோர் உடனே சேர . அன்றேல் ஏமாற்றம் அடைவார்கள்.

C வகுப்புச்சீட்டின் முதலாவது ஏலத்தில் திக உயர்ந்த கழிவு 10 ரூபா. இரண்டா து கட்டுப்பணம் ரூபா 6-63 மாத்திரமே.

S. R. இக்னேஷஸ்,
மானேஜர்.

Mis. 550. 28th)

---

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவிச் ட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு டிக்கும் திரிகோணமலை 6-ம் நெம்பர் காசுக் டை வீதி முருகுப்பிள்ளை தாமோதரம் ள்ளை & இராசலிங்கம் என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை ப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகை ளின் விபரம்.

1931-ம் ஆ 1-ம் மாதம்.

| இல. | தி. | ரூ. | ச. | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|
| 3319 | 1 | 65 | | முவிபத முறிச்சக்குத்தி அட்டியல் 1 |
| 3329 | 2 | 8 | | வட சுடுக்கன் 4 |
| 3345 | 3 | 15 | | பூசார்திரம் பின்னுடன் வெ மணி 9 பளுத |
| 3346 | „ | 14 | 50 | வெ அடுக்குக்காப்பு சோடி 1 ச இ |
| 3405 | 5 | 8 | | சிறு பூசார்திரமுடன் மணி 3, பொன் கொப்புச்சிமிக்கி சோடி 1 சிமிக்கி 1 இல்லை |
| 3448 | 6 | 6 | | பொன் தோடு சோடி 1 |
| 3449 | „ | 7 | | இ கல் முகப்பு சோடி 1 |
| 3450 | „ | 6 | | வெ முத்துக்கறணை சோ1 |
| 3464 | 7 | 50 | | கொலிசுக்காப்பு சோடி 1 பழுது |
| 3518 | 9 | 13 | | பின்கோர்க்கி 1 |
| 3538 | 10 | 10 | | இ கல் கவுந்தோர் 1 |
| 3550 | „ | 45 | | முறிச்சக்குத்தி அட்டியல் 1 |
| 3552 | „ | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3555 | „ | 12 | | இ கல் பதக்கம்1 கல் விழு |
| 3646 | 13 | 10 | | இதட்பூ 1 |
| 3659 | „ | 12 | | வெ அடுக்குக்காப்பு சோடி 1 ச இ |
| 3692 | 15 | 20 | | நசியல் பூசார்திரமுடன் பலவித மணி 10 |
| 3696 | „ | 14 | | கூடு 1 நசியல் |
| 3740 | 18 | 6 | | டைமன் கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3747 | „ | 47 | | பட்டணக்காப்பு சோடி 1 |
| 3804 | 19 | 10 | | தங்க மோதிரம் 1 |
| 3808 | „ | 7 | | குவை அரைப்பவுண் 1 |
| 3812 | „ | 8 | 04 | பொன் பத சிறு பொன் சறடு 1 |
| 3835 | 20 | 6 | | வெ குழற்காப்பு சோடி 1 |
| 3846 | 20 | 12 | | இ கல் கவுத்தோர் 1 |
| 3872 | 21 | 6 | | சிறுஇமிற்தோடு1 கல்விழு |
| 3885 | 22 | 10 | | வெ அடுக்குக்காப்பு சோ 1 |
| 3957 | 25 | 10 | | இதட்பூ 1, வெ தகடு இல்லை, மோதிரம் 1 |
| 3977 | 26 | 10 | | குவளை சோடி 1 ச இ |
| 3988 | „ | 10 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3986 | „ | 15 | | உட்சட்டு 1க்கு தட்டு 23 ஏ இல்லை |
| 3997 | „ | 30 | | அலுக்குத்து 21 |
| 4042 | 28 | 6 | | மேலீடு சோடி 1 |
| 4044 | „ | 6 | | மேலீடு சோடி 1 |
| 4084 | 30 | 45 | | பீலிக்காப்பு சோடி 1 ச இ |
| 2-ம் மாதம் | | | | |
| 4135 | 1 | 12 | | செருகுதோடு சோடி 1, பொன் கூடு 1, அரும்பு மணிக்கோர்வை 1 பி இ |
| 4137 | „ | 10 | | இமிற்கல் தோடு சோடி 1 கல் வி |
| 4160 | 2 | 6 | 50 | சிறு செவ்வந்திப்பூத்தோடு சோடி 1 |
| 4182 | 3 | 7 | | பழுதான தண்டை சோ 1 |
| 4219 | 5 | 11 | | வளையல் 8 |
| 4227 | „ | 14 | | பூசார்திரம் 1 |
| 4245 | 6 | 6 | | வெ குழற்காப்பு சோடி 1 ச இ பழுது |
| 4315 | 8 | 8 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 மு வி |
| 4317 | „ | 10 | | வெ குழற்காப்பு சோடி 1 ச இ |
| 4373 | 11 | 9 | | பொன் காதுப்பூ சோடி 1 வெ அடுக்குக்காப்புசோடி1 |
| 4411 | 13 | 15 | | பூசார்திரமுடன் சினமணி 2 வெள்மணி 2 |
| 4501 | 16 | 9 | | சிறு தக்கக்காப்பு 1 |
| 4512 | 17 | 30 | | பூசார்திரமுடன் மணி4 சசி |
| 4513 | „ | 13 | | வெ அடுக்குக்காப்பு சோ 1 |
| 4688 | 25 | 13 | | செடிவைத்த பவுண் 1 |
| 4738 | 28 | 70 | | செட்டிப்பூரான் அட்டியல்1 |
| 3-ம் மாதம் | | | | |
| 4745 | 1 | 16 | | சிறு தக்கக்காப்பு சோடி 1 பூ இ |
| 4760 | „ | 35 | | பீலிக்காப்பு சோடி 1 சசி ச 1 இ, செருகுதோடு சோடி 1 |
| 4781 | 2 | 22 | | பூசார்திரமுடன் மணி 4 |
| 4793 | 3 | 30 | | விரல் படக்கர் 2 முத்து மோதிரம்1, சிறு இதட்பூ1, எஸ்கறணை சோடி 1 |
| 4794 | „ | 27 | | இ புரோச் 1, (கப்பிகுறை) தங்கமோதிரம் 1, விரல் படக்கர் 1 |
| 4830 | 5 | 15 | | இ கவுத்தோர் 1 |
| 4840 | „ | 10 | 04 | இ கல் S மோதிரம் 1 |
| 4969 | 14 | 10 | | தங்க மோதிரம் 1 |
| 5020 | 16 | 12 | | தகடுடன் கூடு 1 கல் 1 இ நசியல் |
| 5054 | 18 | 9 | | சிறு தக்கக்காப்பு சோடி 1 பூ இ |
| 5068 | 19 | 10 | | பி இ சிறு மணிக்கோர்வை 1க்கு மணி 29 |
| 5117 | 22 | 6 | | சிறு இமிற்தோடு சோடி 1 |
| 5149 | 25 | 6 | | வெ எஸ்கறணை சோடி 1 |
| 5215 | 29 | 15 | 04 | வெ பாதசரம் சோடி1 பழு |
| 5242 | 30 | 13 | | இ கல் கவுத்தோர் 1 |
| 5253 | 31 | 9 | | முறுக்கு மோதிரம் 1 |
| 4-ம் மாதம் | | | | |
| 5294 | 3 | 9 | 50 | பி இ மணிக்கோர்வை1க்கு மணி 28, பொன் காதுப்பூ சோடி 1 ச இ, அலுக்கியா சோடி 1, எஸ்கறணை சோடி 1 |
| 5299 | „ | 20 | | மோதிரம் 4, இ கல் மோதிரம் 1, முத்துமோதிரம் 1 |
| 5308 | 4 | 13 | | பூசார்திரமுடன் மணி 12 |
| 5309 | „ | 12 | | பொற்சறடு 1 |
| 5311 | „ | 7 | | வெ குழற்காப்பு சோடி 1 |
| 5313 | „ | 7 | | சிறு செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 5347 | 5 | 30 | 04 | பொன் சம்புதாதவளையல் 2 |
| 5361 | „ | 6 | 04 | அரும்புமணிக்கோர்வை 1, தோர்க்குச்சு சோடி 1 |
| 5370 | 6 | 10 | | பத சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 21 பழுது |
| 5432 | 8 | 15 | 04 | இ சவுத்தோர் 1 கல் விழு, இலைப்புரோச் 1 |
| 5433 | „ | 9 | 04 | தக்கக்காப்பு 1 |
| 5441 | „ | 60 | | அரைப்பவுண்9-ம் பிறைசு ஐந்திலொருபவுண் 2-ம் சிறு சுதேசிக்காசு1-ம் கோர்த்த பொன் சங்கிலி 1 கொ இ, இதட்பூ 1 |
| 5472 | 9 | 40 | 04 | சிறு வைரசங்கிலி 1, தக்கச் சங்கிலி 1 |
| 5478 | 10 | 10 | | சிறு இமிற் தோடு சோடி1 |
| 5542 | 13 | 15 | | பூசார்திரமுடன் மணி 2 சவுக்கமணி 9 |
| 5547 | „ | 13 | 04 | அக்கமுடன் இலைப் புரோச் 1 |
| 5557 | „ | 17 | | அடுக்குக்காப்பு சோடி 1, வெ குழற்காப்பு சோடி 1 |
| 5563 | „ | 9 | | தங்கமோதிரம் |
| 5611 | 17 | 16 | | பொத்தான் அரைப்பவுண் 3 குண்டு 1 செம்பு |
| 5649 | 20 | 20 | | சவுக்கமணிக்கோர்வை 1ல் பலவித மணி 28 பி இ, சிறு மணிக்கோர்வை 1ல் மணி 30, சிறு தண்டை சோடி 1 |
| 5665 | „ | 20 | | அரைப்பவுண் 2, குண்டு வைத்த அரைப்பவுண் 2 |
| 5683 | 21 | 40 | | பூரானட்டியல் 1 |
| 5756 | 26 | 12 | | இமிற்சாதோலை சோடி 1 |
| 5759 | „ | 20 | | பூசார்திரம பலவிதமணி12 |
| 5790 | 27 | 7 | | சிலப்புக்கடுக்கன் சோடி 1 |
| 5800 | „ | 6 | 50 | இ சிறு தோடு சோடி 1 |
| 5826 | 29 | 10 | | இ கல் கவுத்தோர் 1 |

விற்பனவு:—ஆங்கிரசவருஷம் ஆடி மாதம் 29ந் திகதிக்குச் சரியான (13-8-32) சனிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகேலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதவுடையார்,
வெந்திஸ்பேஸ்தர்,
திரிகோணமலை.

(Mis 549. 28—1 8-32)

---


## கவுண்மேந்துக் கொந்திருத்துக்குக் கொடுபடும் கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம், 14 இஞ்சுப்பக்கா ஓடு முதலியன அடைமழைக் கும் கசியாது; அண்டப்பார்த்தாப்போலக் கூரையில் அடுக்கலாம். பாரங் குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

பூ, சிங்கத்தலை, மயிலிறகு விசிறி, பூச்செடி, கலசமுடி, கோபுரமுடி முத லிய அழகான முகட்டோடுகளும், கண்ணுடி ஓடு, காற்றோடு, விசாலமான வெளிச்ச ஓடு, அலங்காரமான சிறுதூண் கல்லுகளும், தழிவிசைக் கல்லு களும்.

யாழ்ப்பாண நகர், கிட்டங்கித்தெரு
**316-ம் நம்பர் ஓட்டுச்சாலையிற்
பெற்றுக்கொள்ளலாம்.**

Y 28. 31/5.

---

வேண்டுஞ்சீதனப்பணத்திற்கோ, விரும்பும் இளைஞர்கல்விக்கோ, தூண்டு கைத்தொழில் விருத்திக்கோ, சொந்தக்குடும்பாதாரத்திற்கோ: ஆண்டுகடந்த அந்திக்காலே ஆறுதலாக வாழ்வதற்கோ:—

இப்பொழுதே

## புறுடென்ஷல்

வீமாக் கொம்பெனியில் சேரவும்.

இதுவே,

பிரித்தானிய சாம்ராஜ்யம் முழுவதிலும் மிகப்பெரியதான வீமா ஸ்தாபனமாகும்.

பிரதானகாரியகர்த்தர்:-

DELMEGE FORSYTH & Co. Ltd,
*Post Box* 45. *Colombo.*

வடபாக மேற்பார்வைக்காரர்,
க. சொர்ணலிங்கம்,
மானிப்பாய்.

(Y. 11. 19 to 31-12-32) வி.

---

இலங்கை ஆயுர்வேத

## ரசாயன அவுஷத தொழிற்சாலை லிமிட்டெட் யாழ்ப்பாணம், இலங்கை.

(இலங்கைச் சட்டப்படி றெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்டது.)

## விளம்பரம்.

மூலதனம்:—ஒரு லக்ஷ ரூபா (100,000)

பத்து (10) ரூபா விலையுள்ள
பதினுயிரம் (10,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒரு பங்கிற்கதிகம் எடுப்பவர்கள் மனுப்பத்திரத்துடன் ஒவ்வொரு பங்கின்பேரிலும் 2 ரூபா 50 சதமும், பின் பங்கு அங்கீகரிக்கப்பட்ட வுடன் பங்கின்பேரில் 2 ரூபா 50 சதமும், பின் மாதவீதம் 2 ரூபா 50 சதமும் கட்டிவரவேண்டும்.

ஒரு பங்குமட்டும் எடுப்பவர்கள் முழுத்தொகையையும் மனுவுடன் அனுப்பவேண்டும்.

## பங்குகள் இப்பொழுது விற்கப்படுகின்றன.

காலதாமதமின்றி உடன்மனுச்செய்து
உங்கட்குத் தேவையான பங்குகளை
வாங்கிக்கொள்ளுங்கள்

இன்னும் ஒருமாசத்திற்குள் பங்குகள் எல்லாம் விற்றுவிடும்.
(Y. 25. 4-3—7-2-33, [வி]

## கள்ளோடுகிடந்த சிரும்பு கண்டத்துள் விக்கியது.

சென்ற வியாழக்கிழமை சுண்டிக்குழியிலுள்ள ஒருவர் மேற்படி வெளியிலுள்ள கள்ளுத்தவறணையொன்றிற் போய்க் கள்ளுக் குடித்தபோது கள்ளுடன் ஏதோ பிறவஸ்து அவரது கண்டத்துட் சிக்கிக் கொண்டது. அக்கோமுதலாக அவர் வேறெவ்வித உணவையாவது அருந்த முடியாதவராயிருந்தார். பின் அவரை காயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் அங்கே யவருடைய கண்டத்தைச் சோதித்துப் பார்த்தபோது கண்டத்துள் ஒரு அங்குலநீளமுள்ள பனஞ் சிறுபொன்று இருந்து எடுக்கப்பட்டது. இக் கோயாளியின் கருத்தின்படி குறித்த கள்ளுத்தவறணையிற் கள்ளுவிற்போர், கள்ளைச் சுத்தமாக வடிகட்டாமையினலித்தச் சிரும்பு கள்ளுடன் சென்றிருக்கவேண்டுமெனக் கூறுகிறார். —கடிதம்.

## கண்டகோடரியாற் கொலையுண்ட கோதை.

(நமது சொந்த நிருபர் எழுதியது.)

இரத்தினபுரியைச்சேர்ந்த தழுக்கொல்லைத் தோட்டத்தில் மாகேவன் கங்காணி என்பவனின் மனைவி சொர்ணம் என்பவள் அயலேயுள்ள ஹூவுப்பை (Houpe) என்னும் தோட்டத்திலிருந்த முத்துச்சாமி என்பவனால் கண்டகோடரியால் இம்மாதம் 21-ந் திகதி சாயந்தரம் 5.30 மணியளவில் கோரமாய்க் கொலையுண்டாள். விபரம் பின் வருமாறு:—

குறித்த முத்துச்சாமியென்பவன் முன் இத்தோட்டத்திலிருந்த சுப்பையா என்பவனின் மனைவியைச் சோரமாய் எடுத்துச்சென்று அவளோடு சீவித்துவந்தான். இவர்கள் இருவருக்குமிடையில் சச்சரவு உண்டாகவே சோரநாயகியாகிய குப்பம்மாள் என்பவள் அவனை விட்டுத் தலுக்கொல்லைத் தோட்டத்திற்கு வந்து வேலையிலமர்ந்திருந்தாள். இவளைக் கொலையுண்டவள் ஆதரித்துவந்தாளென்றும் இதை முத்துச்சாமி என்பவன் கேள்வியுற்று இவ்விடம்வந்து இடையிடையே சச்சரவு செய்துபோனதாகவும் பிரஸ்தாபம்; முத்துச்சாமி குப்பம்மாள் இருவருக்கும் ஹூவுப்பைத் தோட்டத்திலிருந்து விலகும்படி இந்தமாதம் 20-ந்திகதி பற்றுச்சீட்டு கொடுக்கப்பட்டது. குப்பம்மாள் பற்றுச்சீட்டுடன் தலுக்கொல்லைத் தோட்டத்திற்கு வந்ததை அறிந்த முத்துச்சாமி 21உ சாயந்தரம் கண்டகோடரியும் கையுமாய்வந்து தொழிலாளரோடு லயத்து விறாந்தையில் உட்கார்ந்திருந்த இப்பெண்ணின் முதுகில் வெட்டி கோடரியை இழுத்தெடுக்கமுடியாமல் நிற்கையில் இறந்தவளின் பருவதன் அறையினுள் இருந்துவந்து கோடரியை இழுத்தெடுக்கப் பக்கத்திலுள்ளவர்கள் இக்கொலைப் பாதகனைப் பிடித்துக்கட்டி வீதியோரம் கிடத்திவிட்டுத் தோட்டத்து டக்ரருக்கு அறிவித்தனர். அவர்வந்து பார்க்கும்போது உயிர்நீங்கிவிட்டது உடனே டெலிபோன் மூலம் பொலிசிற்கு அறிவிக்கஅவர்கள் ஆராய்ச்சியுடன் வந்து விசாரணை செய்தார்கள் அடுத்தநாள் 22உ காலையில் பொலிஸ் அதிகாரி டக்டர் நீதிபதி முதலியோர் வந்து மரணவிசாரணை நடத்தியதில் முதுகுப்பக்கம் எழு எலும்புகள் வெட்டப்பட்டு உட்கருவிகளும் வறுபண்ணப் பட்டிருந்ததாய் தெரியவந்தது விசாரணை முடிந்தபின் பிணத்தை அடக்கம் செய்யச்சொல்லிக் கொலைஞனைக் காவலுடன் கொண்டு சென்றனர். கடிதம்.

## இரு நியாயவாதிகட்குச் சிறை.

சென்ற 25-ம் தேதி பம்பாயிற் பிரபல நியாயவாதிகளாகும் ஸ்ரீ R. T. தேசாயும், ஸ்ரீ மங்களதாஸ் தாகாவா அவர்களும் அவசரச்சட்டத்தின்கீழ் சிறையாக்கப்பட்டனர்.

## சர்வாதிகாரிக்குச் சிறை.

ஐக்கியமாகாணச் சர்வாதிகாரியான ஸ்ரீ V. T. திருப்பதி அவர்கள் 22உ விசாரணை செய்யப்பட்டு ஒருவருஷக்கடுங் காவற்றண்டனையும் 50 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டார்.

## இந்திய—ஐரிஷ் சங்க ஸ்தாபனம்.

இந்திய தலைவராகும் ஸ்ரீ வித்தல்பாய் படேல் அவர்கள், டபிளின் நகருக்குச் சென்றதன் பயனாக அந்த நகரில் இந்திய ஐரிஷ் சுதந்தர சங்கத்தார் ஒருபொதுக் காரியாலயத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். இதுபோல் லண்டனிலும் ஓர் சங்கம் நிறுவப்படுமாம்.

## ஐக்கியமாகாணத்திற் தீவிரமான சட்டமறுப்பு.

ஐக்கியமாகாணத்தில் சட்டமறுப்பு மீண்டும் மும்முரமாக ஆரம்பித்துள்ளது. லக்னோ நகரில் 22உ தேசியமகாசபை ஆச்சிரமத்தைப் பொலிசாரிடமிருந்து கைப்பற்ற முயற்சித்த 7 தொண்டர்களும், வரிமறுப்புப் பிரசாரத்துண்டுப் பிரசுரங்களை வழங்கிய 2 தொண்டர்களும் சிறை செய்யப்பட்டனர்.

## பின்னும் ஒரு உதை.

—:*:—

### மறுவனுப்பிய அரசாங்கசபையினர்.

ஆங்கில மந்திரியின் பதில்.

அரசினர் அதிகாரிகளுக்குப் பிரயாணச்செலவு கொடுத்தல், உத்தியோகத்தர்களின் சம்பளவெட்டு, வரிமானவரிச்சட்டம் முதலியன சம்பந்தமாக இலங்கைத் தேசாதிபதியானவர் யதேச்சாதிகாரப் பிரயோகம் செய்ததை ஆட்சேபித்து சேர் ஹென்றி டிமெல் உட்பட 25 அரசாங்கசபைப் பிரதிநிதிகள் சேர்ந்து ஓர் மனுவையும், G. K. W. பெரீரா தனியாக ஓர் மனுவையும் தேசாதிபதி மூலமாக குடியேற்றநாட்டு மந்திரிக்கு அனுப்பிவைத்தனர். மேற்படி மனுக்களுக்குக் குடியேற்ற நாட்டு மந்திரியாராகும் சேர் பிலிப் கன்லிவ் லிஸ்ரர் தேசாதிபதி மூலமாக ஓர் விடையை அனுப்பியிருக்கிறார். அது வருமாறு:

டௌனிங்தெரு,
லண்டன்: 10-6-32.

ஐயா,

அரசினர் உத்தியோகத்தர்களின் சம்பளவெட்டு, அதிகாரிகளின் பிரயாணச்செலவு, முதலியன சம்பந்தமாக அரசாங்கசபையின் புத்தளப்பிரதிநிதி சேர் ஹென்றி டி மெல் உட்பட 25 பிரதிநிதிகள் தாங்கள் யதேச்சாதிகாரப் பிரயோகம் செய்ததை ஆட்சேபித்துத் தங்கள் மூலம் எனக்கு அனுப்பிய மனுகிடைத்தது. அத்துடன் மாத்தறைப்பகுதியின் பிரதிநிதி மிஸ்ரர் G. K. W பெரீரா, அரசியற்றிட்டத்தின் 22 (1) (b) பிரிவின்படி தாங்கள் தங்களுக்குரிய விசேஷ அதிகாரங்களின் பிரகாரம் வெளியிட்ட அறிவிப்பை ஆட்சேபித்து அனுப்பிய மனுவும் வரப்பெற்றேன்.

மேற்படியார்கள் அனுப்பிய மனுக்களை யான் பார்வையிட்டு நன்கு ஆலோசித்தேன் என்றும் குடியேற்றநாட்டு மந்திரியின் ஆலோசனையின் பேரிலும் அவரது பூரண சம்மதத்தின் பேரிலுமே தாங்கள் அரசியற் சட்டத்தின் 23 (1) வது உட்பிரிவின் பிரகாரம் விசேஷ அதிகாரப் பிரயோகம் செய்தீர்களென்றும் நான் தங்களுக்கு எழுதியிருப்பதாக மேற்படி பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுஜன சேமத்தை முன்னிட்டு தேசாதிபதி தாம் எந்த விஷயத்தை முக்கியமானதெனக் கருதுகின்றாரோ அதை விஷயமாகத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் விசேஷ அதிகாரச் சட்டப் பிரிவுகளைப் பிரயோகிக்கவும் அவருக்குச் சட்ட பூர்வமான அதிகாரம் உண்டு. மேற்குறித்த விஷயங்களில் தாங்கள் விசேஷ அதிகாரப் பிரயோகம் செய்தது முற்றிலும் நியாயமானதென்றே நானும் அபிப்பிராயப்படுகின்றேன்.

உத்தியோகத்தர்களின் சம்பளவெட்டு விஷயமாக, குடியேற்றநாட்டு மந்திரியின் சம்மதத்தின் பேரிலும், "சிவில்சேர்விஸ்" உத்தியோகத்தர்களுடன் அரசினர் செய்திருக்கும் ஒப்பந்தங்களுக்குப் பாதகமில்லாமலும், அரசாங்க சபையின் சம்மதமில்லாமலே உத்தியோகத்தர்களின் சம்பளத்தைக் குறைக்க தேசாதிபதிக்குப் பூரணமான அதிகாரம் உண்டு என்பதை மேற்படி பிரதிநிதிகளுக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்களைக் குறைக்க அரசாங்கசபைக்கு யாதோரு அதிகாரமும் இல்லை. சம்பளச் செலவுகளை நிராகரிக்கவோ அல்லது குறைக்கவோ அரசாங்கசபைக்கு அதிகாரமுண்டு என்பதை அவர்களுக்கு அறிவிக்கவும்.

சம்பளச் செலவுகளைக் குறைக்க அரசாங்க சபைக்கு அதிகாரம் உண்டு. எனினும் அரசியற்றிட்டத்தின் 87-வது பிரிவின்படி இது விஷயத்திலும் அதற்கு ஓர் வரம்பு உண்டு என்பதை அவர்கள் உணரவேண்டும்.... அதிகாரிகளுக்குப் பிரயாணச்செலவு கொடுப்பது சம்பந்தமாக, அவ்வதிகாரிகள் எத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டுக் கடமைபார்த்து வருகின்றார்களோ அத்தகைய நிபந்தனைகள் மாறாது இருக்கவேண்டுமென அரசியற்றிட்டத்தின் 87-வது பிரிவிற் கூறப்பட்டிருக்கின்றது என்பதையும் மறுவனுப்பினோர் உணரவேண்டும்.

அதிகாரிகளின் பிரயாணச்செலவைப் பறிமுதல் செய்ய அரசாங்கசபை பிரேரிப்பதைக் குடியேற்றநாட்டு மந்திரி அங்கீகரிக்கவில்லை. 87-வது பிரிவிற் காணப்படும் அதிகாரிகளின் உரிமைகளை மாற்றுமலிருக்கும் பொருட்டு 22-வது பிரிவின்படி தேசாதிபதி தமது விசேஷ அதிகாரத்தைப் பிரயோகிக்கச் சுதந்தரமுண்டு என 87 (4)-வது பிரிவிற் கூறப்பட்டிருக்கின்றது.

(ஒப்பம்) P. கன்லிவ் லிஸ்ரர்.

## கடன் விருந்திற்குத் தப்பும் ஜனப்பிரதிநிதிகள்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

மிஸ்ரர் H. M. S. வான்கைலன்பேர்க் விசாரணை செய்யப்பட்டார் அவர் கொடுத்த சாட்சியம்:- "வழக்காளியான அமரிஸ் என்பவன், தான் சில அங்கத்தவர்களுக்குக் கடன் கட்டளை கொடுக்கும் நோக்கமாக அரசாங்க சபை மண்டபத்து வாயிலில் நின்றபோது, யாரோ காக்கிஉடைதரித்த ஒருவன் மேல்மாடியில் நின்று தன்மீது சிகப்பு நிறமான மையூற்றினன் என்று கூறினன். உடனே யான் மேலே சென்று, ஐரோப்பிய பொலிஸ் சார்ஜென்ராகிய ஆர்மிற்றேஜ் என்பவருக்கு அறிவித்தேன். காக்கியுடையோடு ஆங்கு நின்றவன் எதிரியே யென்பதை நான் அறிந்தேன். நான் கோமுகமேடைக்குச் சென்றேன். அப்போது எதிரி கக்கூசில் இருந்து வெளிவருவதை நோக்கினேன். அப்போது கையைக் காட்டும்படி அவனுக்குக் கட்டளையிட அவன் அப்படியே காட்டினன். சிவந்த மைத்துளிகள் அவனுடைய உள்ளங்கையில் இருந்தன.

நான் குற்றவாளியை ஏன் இப்படி மசியை ஊற்றினய் என்று கேட்டபோது வழக்காளி சதா தொந்தரவு கொடுத்தமையினுல் தான் வேடிக்கைக்காக அப்படிச் செய்தேனென்று கூறினன்."

இதன்பின்னர் எதிரி விசாரிக்கப்பட்டான. அவன் தான் வேண்டுமென்று மசியை ஊற்றவில்லையென்றும், தற்செயலாகவே அது பட்டதென்றும் கூறினன். அரசாங்கசபைத் தலைவர் மிஸ்ரர் A. F. மொலமூறே சாட்சியங் கூறியபின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு 50 ரூபா அபராதம் விதித்தார். அவர் தமது தீர்ப்பிற் குறிப்பிட்டது:

"வழக்காளியாகிய அமரிஸ் அரசாங்க சபை அங்கத்தவர்கள் சிலருக்குக் கட்டளை அளிக்கவந்தான் அவனைத் தடுப்பதற்காக வேண்டுமென்றே எதிரி மையை அவன்மீது ஊற்றினன். அங்கத்தவர்கள் சிலருடைய கட்டளைக்கிணங்கியே இவன் இபபடியான குற்றத்தை இழைத்திருக்க வேண்டும், அல்லது அவர்களின்மீது கொண்ட கரிசனையின் நிமித்தம் இப்படிச் செய்திருக்கவேண்டும் என்றே நான் நம்புகிறேன. இத்தகைய குற்றங்களை இழைப்பவர்களுககுப் போதிய தண்டனை விதிக்க வேண்டும. ஏனெனில்,

1. இந்த வழக்கு மிக்க பிரபலியமடைந்துவிட்டது. எனவே, கடன் கட்டளை கொண்டு செல்லும் "பிஸ்கால்" உத்தியோகத்தனைத் தடுப்பது பெருங் குற்றம என்பதை எல்லோரும் அறியவேண்டும்.

2 கடன்கட்டளை கொடுப்பவனின் கடமையோ மிக்க கஷ்டமானது. அவன் தனது கடமையைச் செய்வதற்கான போதிய ஆதரவை நாம் அளிக்க வேண்டும. இபபடியான ஆதரவை அரசினர் அளிக்காவிட்டால் "பிஸ்காற்"சேவகர் தம கடமையைச் செய்வது மிக்க கஷ்டம்.

## தேவை.

தராதலப்பத்திரம் பெற்ற தமிழ் உபாத்தியாயனி

மானேஜர்,
ஸ்ரீ சண்முக வித்தியாலயம்
தமிழ் பெண்பாடசாலை
திருக்கோணமலை

(Mis. 543. 21, 28, & 4.)

## கவியரசரின் சமாதான வேண்டுகோள்

இந்தியாவின் தற்கால நிலைமையைக் குறித்துக் கவியரசர் தாகூர் பின்வருமாறு கூறுகிறார்:—



(கவியரசர் தாகூர்.)

"நீதியையும் பொறுமையையும் மூலாதாரமாகக் கொண்ட பரஸ்பரசமாதானம ஏற்படவேண்டிய காலம் சமீபித்து விட்டது. இந்நாட்டிலுள்ள மக்களுக்கு வழிகாட்டிகளாயுள்ள பிரமுகர்களும இந்நாட்டோடு விதியால் இணைக்கப்பட்ட அந்நியப் பிரமுகர்களும் தீர்க்கதரிசன புத்தியுடன் சமாதானத்துக்கு முன்வரவேண்டும். சமாதானமான வழிகளில் இந்நாடு சமுகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும முன்னேறுவதற்குவ துவான ஒரு அரசியற்றிட்டத்தை அமைக்க இரு பகுதியாரும தங்கள் தங்களுடைய அபிப்பிராயபேதத்தை யொழித்து ஒத்துழைக்க முன்வருவார்களாக."

## விளம்பரம்.

யாழ்ப்பாணம் அரசாட்சியாருக்குரிய விறகு காலைக்கு கீழே விபரிக்கு இடத்திலிருந்து விறகு கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு வருமான அதிகாரத்தலைவாது கந்தோரில் 1932-ம் ஆண்டு ஆவணிமூ 16உ செவ்வாய்க்கிழமை முற்பகலுக்குப் பிந்தாமல் ஏற்கப்படும்:—

Service A—மண்டக்கல்லாற்றுக் காவல்காட்டிலிருந்து 3500 தொன் விறகு ஏறக்குறைய

Service B—மண்டக்கல்லாற்றுக் காவல்காட்டிலிருந்து 1500 தொன் விறகு ஏறக்குறைய.

முழு விபரங்களை 1932-ம் ஆண்டு ஆடிமூ 15உ வெளிவந்த 7935-ம் இலக்கவண்மந்து 'கசற்' பத்திரிகையி லறிந்துகொள்ளலாம்.

J. D SARGENT,
*Conservator of forests*

வனபரிபாலனாது கந்தோர்,
கொழும்பு, ஆடி 21, 1932.
(G 167. 28*th*)

## ஸ்ரீ ராமநாத ஆசிரிய பயிற்சிக்கழகம்.

இக்கழகத்திற்குரிய பிரவேச பரீக்ஷை நிகழும் ஆங்கிரசவூ ஆடிமீ 22-ந்தேதிக்குச் சரியான 1932-ம்ஆ ஆக்கஸ்ட்மீ 6உ சனிக்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிரிய முதலாம் வருட வகுப்பிற் சேர விரும்பும் ஒவ்வொரு மாணவியும் 17 வயது நிரம்பியவராகவும் ஆசிரியபிரவேச (பிறிலிம்) வகுப்பிற் சித்தியெய்தியவராகவும் இருத்தல் வேண்டும்.

இவர் தமது மனுப்பத்திரத்தை இப்பாடசாலை அதிபர் லேடி இராமநாதனவர்கள் விலாசத்திற்கு ஆக்கஸ்ட்மீ 3-ந் தேதிக்குப் பிந்தாமல் அனுப்பிவைத்தல் வேண்டும.

*R. L. Ramanathan,*
*Manag r.*
*19th July 1932.*

(*Mis 546. 21, 28, 1*)

## ப ச ளை.

—*—

ஸல்பேற் ஒப் அமோனியா
(SULPHATE OF AMMONIA.)
எல்லாவிதமான பயிர்களுக்கும் வாய்ப்பானதென அநுபவத்திற் கண்டது.

விற்பவர்கள்:
கொழும்பு,
கொம் மேர்சல் கம்பெனி
(லிமிட்டெட்.)
கொம்பனித்தெரு.
கொழும்பு.

(*H* 15. 22-12-32. *வி.*)

ஸ்ரீ

கதிர்காமம்

கதிரைமலைத்



தண்ணீர்ப்பந்

தர்த் திருப்

பணித் தர்மம்.



கதிரைமலை கடிமலையிலுள்ள முத்துமாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடந்தேறிவருகிற செடி தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும் நடந்தோங்கி வருகிறது.

குறித்த கதிரமலை உச்சியிலும் கடிமலையிலும் திருமடம் அமைத்து அடிவாரத்திற் பெருமானுற் காட்டப்பட்ட நீர்த்தக்கிணற்றிலிருந்து கடிமலை விநாயகர் கோவில்வரை குழாயிணைத்து தண்ணீர்த் தருமம் நடத்துவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

இத்தருமம் நிறைவேறும் பொருட்டு சனதனவான்களாகிய சகல புண்ணியசீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

உதவும் பணத்தை அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் தீவுபற்று மணியம், வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சிடனுகிய சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசாமிப் பரதேசியார்,
கதிரைமலை

(Y. 16. 9-7—8-7-32.) (ஸி)

---

# விளம்பரம்.

:o:

ஜவுளிவகையில்

## எல்லாவிதமான துணிகளும்

பெரியகடை, காங்கேயன்துறைத்

தெருவிலுள்ள எமது

## சில்லறைவிற்பனைக் கடையில்

தாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ஜவுளிகளும்,

## இலங்கையிற் செய்யப்பட்டன

என்பதற்கு உத்தரவாதம்.

மற்றைய விடங்களிலும் பார்க்க எமது ஜவுளிகள்

## குணத்தாற் சிறந்தன

## விலையாற் குறைந்தன.

இன்னும், ஒருமுறை வந்து பார்ப்பின்

இதனுண்மை நன்கு புலப்படும்.

## இலங்கைநெசவுத்தொழிற்சாலை

லிமிட்டெட்.

(Y 20)

---

# இதன் மேன்மையை இரசாயனன் அறிவான்.

பாவிப்பவரும்
இதன் உண்மையைஅறிவாராக.

எவ்வகையான குத்து வலிகளுக்கும், உடம்பிலுள்ள உளைவுகளுக்கும் முதற்தரமான சிறந்த இந்தியசஞ்சீவி.

## 'லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்'




1885-ம் ஆண்டுதொடக்கம் இந்தியாவில் இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்டு வருகிறது.

லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்,
& பர்மஸியூர்திக்கல்ஸ் லிமிட்டெட்,
தபாற்பெட்டி 67,
சென்னை.

(Y. 11.2 32—10 2-33.) D.

---



தங்க மெடல்கள் பெற்ற

ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்

செய்யப்படும்,

திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்கமெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப்புகழ்பெற்றது மிகஇலேசானது, மலிவானது; ஒவ்வொரு ஓட்டிலும்குடை அடையாளம் விளங்கும். காங்கேசன் துறையிலே நவமாகக் கட்டப்படும அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணுடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 29, 1 5 to 30-4-33)

---

## பலையாளம் சில்க்.

2½-வீதி 5-நீளம் பட்டு 1-க்கு ரூ.1-8-0
டிெ கம்பிக்கரை டசன் 1-க்கு ரூ. 15
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ.3-8-0

S. K. R, வீவிங் பாக்டரீ,
(Y. 30.) கோட்டார், திருவிதாங்கூர்.

---

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக்கதை ரூ. 2½. (6) பழமொழியகாதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகக்கியாட்லாக்
→ இனும். ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y. 17. 7-9—8-9-3

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

:O:

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமூஸ்லி, சப்பேமூர்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு,நீர்க்கடுப்பு,நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால்ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மணிஆடர்அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.
(Y 27. 31-12-32.) இலோன்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.